விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து *Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
# VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 05 ஞாயிற்றுக்கிழமை (17.02.2002) தொலைபேசி 3378 ஒலி 60

### அரியாலை கிழக்கில்

# மரம் ஏற்றிவந்த ரைக்டர் அமுக்கவெடியில் சிதறியது

## ஒருவர் ஸ்தலத்தில் பலி, இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மரம் ஏற்றிக்கொண்டு புறப்பட்ட ரைக்டர் அமுக்க வெடியில் சிக்கியதில் அதில் பயணம் செய்த ஒருவர் உடல் சிதறிப் பலியானார். இருவர் படுகாயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரியாலை கிழக்கு நெடுங்குளம் சந்திக்கருகில் 200யார் தூரத்தில் உள்ள குகன் ஒழுங்கையில், நேற்று முற்பகல் 11மணியளவில் இக்கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் ரைக்டர் பெட்டிக்கு மேலே அமர்ந்திருந்த ஆடியபாதம் வீதி , கல்வியங்காட்டை சேர்ந்த 3பிள்ளைகளின் தந்தையான சின்னையா நாகரத்தினம் (வயது27) என்பவர் நெஞ்சுப் பகுதி சிதறிய நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கச்சேரி நல்லூர் வீதியை சேர்ந்த சோமசுந்தரம் விஜயகுமார் (வயது40), நல்லூர் செம்மணி வீதியை சேர்ந்த

(10ம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் சடலம்

(கோப்பாய்)

கோப்பாய் கந்தசாமி கோவிலுக்கு அருகில் உள்ள கடையொன்றுக்கு முன்னால், வயோதிபரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை சடலத்தை அவதானித்த அப்பகுதி மக்கள் அது குறித்து அப்பகுதி கிரம அலுவலர் எஸ்.ரி.வரதராஜனிடம் புகார் செய்தனர்.

சடலத்தை பார்வையிட்ட கிராம அலுவலர் கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை கோப்பாய் இராஜ வீதியைச் சேர்ந்த கந்தையா தர்மலிங்கம் (வயது 77) என்பவரே இறந்தவரென உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது (இ)

### தேர்தல் பிரசாரங்கள் மூலம்

# சமாதான முயற்சிகளை குழப்ப வேண்டாம் !

## பொ.ஜ.முன்னணி கட்சியினருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்

(நமது நிருபர்)

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம் பெற்றுவரும் சமாதான முயற்சிகளை குழப்பும் விதத்தில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொது ஜன ஐக்கிய முன்னணி தலைவர்களுக்கும் எம்.பிக்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.**

மேல் மாகாண சபையின் தியுள்ளார்.

ஜன ஐக்கிய முன்னணி அரசு

## எரிபொருளை ஏற்றிக்கொண்டு மேலும் இரண்டு கப்பல்கள் விரைவில் யாழ். வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு மக்களுக்கு தட்டுப்பாடும், கட்டுப்பாடும் இன்றி தாராளமாக எரிபொருளை விநியோகம் செய்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

கள் டீசல், மண்ணெண்ணெய் யுடன் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வரவுள்ளன.

இதேவேளை தற்போது எடுத்து வரப்படும் பெற்றோலின் இரு

**குழப்பும் விதத்தில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொது ஜன ஐக்கிய முன்னணி தலைவர்களுக்கும் எம்.பிக்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.**

மேல் மாகாண சபையின் மாநகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை அழைத்து நடத்திய கூட்டமொன்றிலேயே மேற்கண்டவாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

அக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேலும் தெரிவித்திருப்பதாவது:

கடந்த காலங்களில் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முற்பட்டபோதெல்லாம் அதனை ஐக்கிய

(10ம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு மக்களுக்கு தட்டுப்பாடும், கட்டுப்பாடும் இன்றி தாராளமாக எரிபொருளை விநியோகம் செய்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஒருகட்டமாக அடுத்த வாரம் 18, 19ஆம் திகதிகளில் மேலும் இரு எண்ணெய்க் கப்பல்கள் டீசல், மண்ணெண்ணெயுடன் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வரவுள்ளன.

இதேவேளை தற்போது எடுத்து வரப்படும் பெற்றோலின் இருமடங்குபெற்றோலை எடுத்து வருவதற்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. (வ)

## சமாதான முயற்சிக்கு முப்படைகளும் ஆதரவு

# யுத்த நிறுத்தத்தால் அரசுக்கு மாதம் நூறு மில்லியன் ரூபா மிச்சம்

### இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் பலகல்ல உரை

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்தத்தினால் மாதம் 100மில்லியன் ரூபா அரசாங்கத்துக்கு மிச்சமாக கிடைத்து வருகின்றது இப்பணம் நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்கு செலவுசெய்யப்படுகின்றது.

யாழ் கண்டிவீதியில் கிளிநொச்சி வரையான பாதைதிறப்பு விழாவில் உரையாற்றிய இராணுவத் தளபதி லெப்டினட்

(10ம் பக்கம் பார்க்க)

## சமாதான யாத்திரை நடத்துவது குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை வலியுறுத்தி இரண்டு நாட்கள் பாதயாத்திரை நடத்துவது தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2.30மணிக்கு நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையக் காரியாலையத்தில் நடைபெற உள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்தில் உள்ள சமய சமூக பொது அமைப்புக்களை சேர்ந்த பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் அ.கி. சிவசுப்ரமணியம் கேட்டுள்ளார். (இ.225)

### வரவு செலவுத் திட்டத்தில்

## தேசிய பாதுகாப்பு வரி நீக்கம் ஜி.எஸ்.ரி வரி அதிகரிக்கும் ?

(கொழும்பு)

அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முதலாவது வரவு செலவுத்திட்டத்தின் படி தேசிய பாதுகாப்பு வரி முற்றாக நீக்கப்படும் சாத்தியம் இருப்பதை நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது நடைமுறையிலுள்ள பொருட்கள் சேவைகள் வரி 12.5

(10ம் பக்கம் பார்க்க)

### மல்லாகத்தில் புகுமுக மாணவி மீது

# பல்கலை மாணவர்கள் ராக்கிங் பொதுமக்கள் திரண்டு தர்ம அடி

(யாழ்ப்பாணம்)

பாடசாலை விளையாட்டுப் போட்டியை பார்த்துக் கொண்டிருந்த பல்கலைக்கழக புகுமுக மாணவியை யாழ் பல்கலைகழக சிரேஸ்ட மாணவர்கள் சிலர் ராகிங்கிற்கு உட்படுத்தி சேட்டை புரிந்ததால் விசனமடைந்த பொது மக்கள் அம்மாணவர்களை நையப்புடைத்து விரட்டியடித்தனர்.

நேற்று மல்லாகம் பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

மல்லாகம் பகுதி பாடசாலையொன்றில் விளையாட்டு போட்டியை பார்த்து ரசித்துக்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


எம் நெஞ்சை விட்டகலா அன்புத் தெய்வத்தின்

# 31ம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

வித்தாய்

14 . 04 . 1947



வேறாய்

17 . 01 . 2002

மண்கும்பானைச் சேர்ந்த உயர்குடித் தோன்றல்
அமரர்

# ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர், மைதிலி ஜுவல்லறி, மதனா ஜுவல்லறி)

### திதி நிருணய வெண்பா

பொங்குதிரு தைத்திங்கள் பூர்வச்சதுர்த்தியினில்
துங்கக்கரி முகத்தோன் தூயதிருவடியில் . பங்கமின்றி
நடராசாப் பெரியோன் நானிலத்தில் நாம் துடிக்க
சுடராகிப் போன நாள்.

உந்தன் உறு நோயை ஒரு நாளும்முரையாமல்
எந்தன் வாழ்வுக்காய் ஏற்றமுற உழைத்தீர்கள்
சொந்த மனையாளும் சோடிழந்து தவிக்கின்றாள்
சிந்தைதனில் மக்கள் சிரம் தாழ்த்தி வணங்குகின்றார்.
மிக்க நலமுடைய மேன்மைக் குணமுடைய
உத்தமரே எம்மாமா எங்குற்றீர் ஏங்குகின்றோம்
அம்புலியைக் காட்டி எமக்கடிசில் ஊட்டிவிட்ட
அன்புக்கரம் தேடி அலைகின்றோம் தாத்தாவே
மைத்துனரே நீங்கள் மறைந்த மாயமென்ன
பித்துப் பிடித்தவர் போல் பிதற்றுகிறோம் கேட்டிலையோ
அண்ணாவே எம்மை அரவணைத்த ஆரமுதே
அன்புத் தலைமகனே ஆற்றாது தவிக்கின்றேன்
உற்றார் உறவினர்கள் ஊரவர்கள் நண்பரெல்லாம்
கற்றாவின் மனம் போல்க் கசிந்துருகிக் கதறுகின்றார்
இற்றைநாள் வரையும் எம்மோடிருந்த
இன்முகத்தைக் காணாது எவ்வழியும் தேடுகின்றோம்
பற்றுடன் வந்தொருக்கால் பார்த்து நீர்போனாலென்ன?

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று 17.02.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு உடனடியாக வந்தும், உடனிருந்தும் வேண்டிய உதவிகளைப் புரிந்தவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைவாயிலாக கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், தந்தி தொலைபேசிகள் மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அவருக்கு ஏற்பட்ட திடீர் நோயிலிருந்து மீட்போம் என்ற நிறை நோக்கில் அக்கறையுடன் பணியாற்றிய யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு டாக்டர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், இறுதிக் கிரியையில் கலந்து கொண்டு வேண்டிய உதவியை வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

199, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(C/3548)

# வளவை ஆற்றின் பள்ளத் தாக்குகளில் தங்கப் படிவுகள்

(கொழும்பு)

வளவை ஆற்றுப்பள்ளத் தாக்குப் பகுதியில் தங்கப் படிவுகள் இருப்பதாக விஞ்ஞானப் பேராசிரியர் கபிலா தகநாயக்க தெரிவித்துள்ளார்.

வளவை ஆற்றின் பள்ளத் தாக்குப் பகுதிகளிலும் ஆற்றின் இடையிடையே காணப்படும் சில பாறைகளிலும் சிறு அளவில் தங்கத்துகள்கள போன்ற அடைசல்கள் காணப்பட்டதாக முதுமாணிப் பட்டப்படிப்பு மாணவர் விஜயரத்ன என்பவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கிறிஸ்துவுக்கு முன் இரண்டாம் நூற்றாண்டில் அனுராதபுரப் பகுதியில் பாறைகளில் தங்கம் காணப்பட்டிருந்ததாகவும் அக்காலத்தில் தங்க ஆபரணத் தொழில் துறை விருத்தியடைந்திருந்ததாகவும் வரலாறுகள் தெரிவிக்கின்றன.

வளவைப் பகுதியில் இருக்கக்கூடிய படிவுகளின் தரங்கள் மற்றும் எந்த அளவுகளில் காணடபடக்கூடும் என்பன போன்ற விபரங்களையும் வர்த்தக ரீதியில் தங்கத்தை உற்பத்தி செய்யக்கூடியதாயிருக்குமா என்பது பற்றியும் இனிமேல் தான் ஆராய்ச்சிகள் செய்யப்பட வேண்டும் எனவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

(உ)

# சட்டத்திருத்தம் மேற்கொண்டு ஜி. எஸ். ரி. வரியை விலக்குக

## நிதியமைச்சருக்கு கடிதம்

(கொழும்புத்துறை)

வட பகுதிக்கான பொருட்களை கப்பல் மூலம் கொண்டு வருவதற்காக அறவிடப்படும் கப்பல் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் பொருட்கள சேவைகள் வரியை ,சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு விலக்குங்கள்.

இவ்வாறு நிதி அமைச்சர் கே.என்.சொக்சிக்கு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில்மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தரைவழிப் பாதைஇல்லாத சூழ் நிலையிலேயே கடல் வழியாக பொருட்கள் வடக்குக்கு கொண்டு வரப்படுகிறன.

இதனால்யாழ்.குடாநாட்டு மக்கள் கிலோவிற்கு 7ரூபா முதல் 12ரூபா வரை ஏற்றியிறக்கல் கட்டணமாகசெலுத்த வேண்டியுள்ளது.

அதைவிட,கொண்டு வரப்படும் பொருட் கொள்வனவின்போது ஜி.எஸ்.ரி வரிக்கு உட்பட்டாலும், உட்படாவிட்டாலும் கப்பல் கட்டணத்தின் மீது பொருட்கள் சேவைகள் வரி அறவிடப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பாகங்களில் ஒருங்கமைக்கப் பட்ட முறைமூலம் பொருட்கள் ஏற்றியிறக்கப் படாமையால் அவற்றிற்கு பொருட்கள் சேவைகள் வரி அறவிடப்படுவதில்லை.

சர்வதேசகப்பல்சேவையின் மீதும் ஜி.எஸ்.ரிஅறவிடப்படுவதில்லை ஆயினும், சர்வதேச கப்பல் போக்கு வரத்து நடைமுறைகளை பின்பற்றியும் சர்வதேச கடற் பிராந்தியத்தின் ஊடாக போக்குவரத்துஎனக் கருதி மேற்படி அறவிடுவது வருத்தத்திற்குரியது.

இவற்றை1998 ஆம்ஆண்டு முதல் சமாசம் நிதியமைச்சுக்கு சுட்டிக்காட்டி வந்துள்ளது.சமாசத்துக்கு உள்நாட்டு இறைவரிஆணையாளர் எழுதிய கடிதத்தில்,இக் கட்டண அறவீட்டை விலக்க வேண்டுமென்றும் இச்சட்டத்தை திருத்தவேண்டுமென் றும் சுட்டிக்காட்டியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது.

(உ-223)

# காணாமற்போனோர் பற்றிய விசாரணை மேற்கொள்ள புதிய குழு வருகை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் இருந்து காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள புதிய சி. ஐ. டி. குழுவினர் யாழ். வந்துள்ளனர்.

ஐ. பி. இன்ஸ்பெக்டர் என். பி. ஆர். பி. குளுகம்முனு தலைமையிலான ஐந்து பேர் அடங்கிய இக்குழுவினர் ஒரு மாத காலம் இங்கு தங்கியிருந்து விசாரணையினை மேற்கொள்வார்கள் எனதெரிவிக்கப்படுகிறது.

மேலும் கடந்த ஒரு மாத காலமாக விசாரணைகளை மேற்கொண்ட நிசந்த பெரகரா தலைமையிலான குழு நேற்று முன்தினம் விசாரணை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-10)

# நிறுவைகள் அளவைகளுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

நாளை திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரையான 4 தினங்கள யாழ். மாவட்டச் செயலகத்தில் நிறுவைகள் அளவைகள நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடப் படவுள்ளதாக அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக்களப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

இப்பணி காலை 9 மணி முதல் பி.ப. 1.30 மணிவரை நடைபெறவுள்ளது. (உ.)

# வீதியை மீளத்திறக்க கோரிக்கை

(கல்வயல்)

புத்தூரில் இருந்து வாதரவத்தை, வீரவாணி, வண்ணாத்திபாலம், மட்டுவில், கனகம்புளியடி ஊடாக மீசாலை செல்லும் வீதியை மீளத் திறந்து மக்கள் பாவனைக்கு விடுமாறு சம்பந்தப்பட்ட பகுதிப் பொதுமக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-111)

# காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளுக்காக உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில்இருந்து 1996,1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் விசேட புலனாய்வுப் பிரிவினர், பின்வருவோர் தொடர்பான விசாரணைக்காக அவர்களின் உறவினர்கள், சாட்சிகள் மற்றும் முறைப்பாட்டுக்காரர்களை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

★ இராஜேந்திரன் கோணஸ்றூபன் (கோ. இல: பி. ஐ -361) 32, செல்லர் வீதி, நல்லூர்.

★ இராஜரட்ணம் சிறிதரன் (கோ. இல: பி. ஐ - 460) டச்சு வீதி, கோப்பாய்.

★ செல்லையா பாலசிங்கம் (கோ. இல: பி. ஐ- 440) நுணாவில் சாவகச்சேரி.

★ ஏ. கே. ரகுமான் (கோ. இல. பி. ஐ - 279) 79, பீச் றோட், யாழ்ப்பாணம்.

★ தேவபாலன் தர்மபாலன் (கோ. இல: பி. ஐ-387) வீரபத்திரர் கோவிலடி கச்சாய்.

★ தர்மலிங்கம் கருணாகரன் (கோ:இல:பி:ஐ:448) நாவற்குழி,கைதடி

★ மனுவல் அந்தோனி (கோ:இல:பி:ஐ: -420) 26, மத்தியூஸ் வீதி, குருநகர்.

★ மகேந்திரம் பாபு (கோ: இல:பி:ஐ:-346)697,கச்சேரி நல்லூர் வீதி.

★ முருகேசு ஜெயராசா (கோ:இல:பி: ஐ:-475) 10, பழைய பூங்கா வீதி, குருநகர்.

★ யேசுதாசன் எமன்கிலோ (கோ: இல: பி: ஐ- 404) 7, மத்தியூஸ் வீதி, குருநகர்.

★ தங்கவேல் சந்திரகுமார் (கோ: இல பி:ஐ: 468)தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

★ சேவியதாஸ்,றெஜினோட் றூபதாஸ் (கோ:இல:பி:ஐ: -9/73) 310, பருத்தித்துறை வீதி,நல்லூர்.

★ துரைசிங்கம் செந்தில்நாதன். (கோ:இல:பி:ஐ -9/45) 6 வில்வன் துறுலேன், அரியாலை.

★ அம்பிகைபாகன் பாக்கியம் (கோ:இல:பி: ஐ: -434) குப்பிளான் தெற்கு.

(உ-10)

# ‘மனித உரிமைகள்’ கட்டுரை போட்டி முடிவுகள்

(மீசாலை)

கரிதாஸ் இலங்கை- செடக் கொழும்பு நிறுவனங்களின் அனுசரணையுடன்மனிதமுன்னேற்ற நிலையம், அகின் இலங்கை பாடசாலை மாணவர்களிடையே நடத்திய ‘மனிதஉரிமைகள்’கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இரண்டாம் இடம்: சி.சாளினி (வேம்படி மகளிர் கல்லூரி)

மூன்றாம்இடம்: சு.அமிர்தசுலோசனா (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

பாராட்டுப் பரிசில்களை, ந.தவச்செல்வம் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), வீ.றோசாணி (திருக்குடும்ப கன்னியர் மடம்),ஜே. அனற்றமணி (சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சங்கானை) ஆகியோர் பெற்றுள்ளனர்.

(உ-229,3)

# சலன சித்திர அமைப்பு ஏற்பாட்டில் ‘நம்முடன் பாரதி’ நெல்லியடியில்ஊர்வலம்

(மந்திகை)

‘சலன சித்திர’ அமைப்பின் வடமராட்சிக் கிளையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பி. ப. 3 மணியளவில் ‘நம்முடன் பாரதி’ என்ற தொனிப் பொருளில் ஊர்வலம் ஒன்று இடம் பெற்றது.

பாரதியாரின் திருவுருவப் படத்தினைத் தாங்கியவாறு நெல்லியடி பஸ் நிலையத்தில் ஆரம்பித்த இந்த ஊர்வலம் மகாத்மா திரையரங்கைச் சென்றடைந்தது.

சலன சித்திர யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். தேவதாசன் தலைமையில், அங்குபாரதியார் நினைவுரை இடம் பெற்று மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் ‘பாரதி’ திரைப்படமும்முடிவில் இலவசமாக்க காண்பிக்கப்பட்டது.


இந் நிகழ்வில், பாடசாலை மாணவர்கள, வர்த்தக பிரமுகர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (உ-23)

# பொதுக் கூட்டம்

(மந்திகை)

யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும்23ஆம் திகதிசனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு சங்கத் தலைவர் க.வி.குலரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின்சம்மேளனத்தலைவர் வ.செல்வராசாவும் பிரதம விருந்தினராக முன்னாள் தலைவர் த.சற்குணராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-23)



# தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (5)

## (தவக்கால முதல் ஞாயிறு)

மண் மண்ணாக இருக்கும்போது மிதிபடுகிறது. குயவனின் கலைத்திறக் கரங்களில் தன்னை இழந்த மண் அழகிய பாத்திரமாகிறது. பொன் மண்ணோடு கிடக்கும்போது மதிப்பில்லை. மண்ணிலிருந்து பிரித்து நகைத்திறக் கலைஞனின் கரத்தில் தன்னை இழக்கும் போது பொன் எழில்மிகு நகையாகிறது. மண்ணாக இருந்தவன் டைக்கும் இறைவனின் திறமிக்க கரங்களில் படைப்பின் சிகரமாகிறான்! மண்ணான மனிதன் சிகரமாக உயர்ந்தது தன்னால் அல்ல! தனக்குள் வீசிய வானகத்தேவனின் உயிர் மூச்சால்! கடவுளின் மூச்சின் செயல்பாட்டில் தன்னை இழந்தபோதே அவன் தன்னை உருவாக்கியவரின் சாயலுக்கு உயர்த்தப்படுகிறான். தன்னை உயர்த்திய இறைவனின் தனியிடத்தைக் குறுக்கு வழியில் அடையச் சோதனைக்குட்படுகிறான். மனிதன் தன்னை, தன் உண்மைநிலையை உணராத காரணத்தால் தடுமாறி வீழ்கிறான். தன் தனி இடத்தை விட்டுத் தாழ்ந்து வந்த இறைமனிதன் இயேசுவோ தன்னையும், இறைவனையும் முழுதும் உயர்ந்ததால் தடுமாறவில்லை.குறுக்குவழிச்சோதனைகளை தவிடுபொடியாக்குகிறார். மரியாளின் வித்தான இறை மகன் இயேசு சோதிப்பவனின் தலையை நசுக்குவதைக் காண்கிறோம். நம்மை உணர்வாம். நாம் இறைவனின் பிள்ளைகள் என்ற உணர்வோடு தெய்வீகப் போராட்டத்தில்இருளின் சக்தியை வெல்வோம். இறைவார்த்தை நம் போர் வாளாகட்டும்!

-காவலன்

# சவுதியில் இருந்து படகை கடத்தி வந்த சிலாபம் வாசிகள் கைது

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் இருந்து டோராபடகு ஒன்றை கடத்தி வந்த சிலாபம் சுதுவெல்ல பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நால்வரைசிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளனர்

இவர்கள் நால்வரும். தொழில் வாய்ப்புப் பெற்று சவுதி சென்றவர்கள் என்றும் சவுதியில் இவர்களுக்குரிய சம்பளப் பணம் வழங்கப்படாமையினாலேயே இவர்கள் படகை கடத்தி வந்தார்கள் என்றும் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

இவர்கள் சிலாபம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-3)

# மெய்வன்மைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைசிதம்பரக் கல்லூரி வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப 2.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செல்வி ஞா.ஞா.மாசலீன் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இளைப்பாறிய அதிபர் செ.யோகச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

(உ-3)

# குழாய்க்கிணறு அமைக்குமாறு கோரிக்கை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் மக்கள்மீளக்குடியமர்ந்து வருவதனால் அப்பகுதிகளில் குழாய்க்கிணறுகளை அமைத்துத் தருமாறு இந்துஇளைஞர் மன்றத்தினர் யாழ். மாநகர சபை குடிநீர் விநியோக பகுதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-5,223)

# உங்கள் பிறப்பு நட்சத்திரத்திற்குகந்ததான சுபவேளைகளைத் தெரிந்து செயற்படுங்கள்

(சென்றவாரத்தொடர்ச்சி)
உத்தராடம்நட்சத்திரம் 2–3-4ம் பாதங்கள்

உத்தராடம் உங்கள் நட்சத்திரமாக இருப்பதால் இந்த நட்சத்திரத்திற்கு அதிபதி கிரகம் சூரியன். இது 21 வது நட்சத்திரம். உங்களுக்கு எப்போதும் நன்மை செய்யும் நட்சத்திரம் சதயம். இதன் விபரம்; தாரா பலன் நான்குக்கு சேஷமம். அதிபதிபலன் தைரியம். வாகனபலன் லட்சுமி இலாபம். சந்திரன் பலன்

## சோதிட பலன்

2,3,4 பாதங்களை உடையவர்களுக்குஅமாவாசைகழிந்த 2 வது நாள எப்போதும் ஆகாது. 5,6,7 வது நாட்கள் எந்த சுபகாரியமும் செய்யலாம். கிழமைகளில் திங்கட்கிழமை சதயம் நட்சத்திரம் வரும் நாள சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் அமிர்தயோகம் வரும். இது உங்களுக்கு எல்லாவித சுபங்களும் செய்ய ஏற்ற நாள. தொழில் ஒப்பந்தம் செய்ய, மனை முகூர்த்தம்செய்யவும், பிரயாணம் செய்யவும் மிகமிக உயர்வானநாளாகும். திங்கட்கிழமையில் சதயம் நட்சத்திரம் வரும் நாள பகல் மணி 11 முதல் 12 க்குள் சுக்கிரன் ஒரை உதயமாகும். இந்த நாளில் உங்கள விருப்பம் போல் எல்லாவித சுபகாரியங்களையும் வைத்துக்கொள்ள வெற்றி உங்கள் பக்கம் நிற்கும். இது வளர்பிறையில் இருப்பது சிறப்பு. சதயம் நட்சத்திரம் புதன் கிழமையில் உதயமாகும் நாள் சித்தயோகம் வரும். மகரிஷிகள சொல்லிய ஆனந்தாதியோகத்தில் மானசயோகம் உள்ள நாள். இதன் பலன் இராஜ சன்மானம். இந்த நாளில் அரசாங்கம், அரசியல் சம்பந்தப்பட்ட முயற்சிகளுக்கு மிக மிக உயர்வான நாளாகும். மற்றும் இதே புதன்கிழமையில் காலை மணி 6.30 முதல் 7.15 க்குள நீங்கள எதையும் செய்யலாம். கடன் கொடுக்க வாங்க, புதுமனை குடிபுகவும், மனைமுகூர்த்தம் செய்யவும் சிறப்பு மிக்க நாளாகும். சதயம் நட்சத்திரம் வெள்ளிக்கிழமையில் வரும் நாள சித்த யோகம் வரும். ஆனந்தாதி யோகத்தில் இது சௌமிய யோகம் உதயநாள. இதன்

பலன் அர்த்த இலாபம். பகல் மணி 1 முதல் 1 30 க்குள் சுக்கிரன் ஓரைவரும். இந்தநேரத்தில் உத்தராட நட்சத்திரம் உள்ளவர் எல்லாவிதமான சுபகாரியங்களையும் செய்ய சிறப்பு நன்மைகள் உண்டாகும்.

உத்தராடம் நட்சத்திர காரர்களுக்கு வேதை (ஆகாத நட்சத்திரம்), புனர்பூசம், திருமணம் செய்ய, தொழில்கூட்டு சேர்க்க உங்களுக்கு ஆகாத நட்சத்திரம்-6(ரச்சு), அவைகள்-கார்த்திகை, புனர் பூசம், உத்தரம், உத்தராடம், பூரட்டாதி, விசாகம் ஆகியவைகள் அதிர்ஷ்டமலர்– செந்தாமரை அனுகூலதெய்வம்-இலட்சுமி. அதிர்ஷ்டக் கல் -வைரம், அதிர்ஷ்டநிறம்- மஞ்சள், அதிர்ஷ்ட எண்-3-1

திருவோணம் நட்சத்திரம்

இந்த நட்சத்திரம் 22 வது நட்சத்திரம், இது சந்திரனுக்குரியது இந்தத் திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு எப்போதும் நன்மை செய்யும் நட்சத்திரம் ரேவதி தாராபலன் 6 க்கு சகலகாரிய சாதனை, அதிபதி சந்திரன் வாகனம் ஐம்புகம், அதிபதி பலன் புகழ். வாகனபலன் சுக விருத்தி, அமாவாசை கழிந்த மூன்றாவது நாள மூன்றாம் பிறைச் சந்திரன் எப்போதும் நீஙகள எந்த சுப காரிய முயற்சியும் செய்யலாம். இது உங்களுக்குச் சிறப்பு மிக்க நாள், தொழில் ஆரம்பம் செய்ய, கட்டடம் கட்டுவதற்கு மனைமுகூர்த்தம் செய்ய, பிரயாணம் ஏற்கவும் சிறப்பான நாள், கிழமையில் ஞாயிற்றுக்கிழமை வரும் நாள ரேவதி நட்சத்திரமாக இருந்தால் அன்று அமிர்தயோகம் உதயமாகும். மகரிஷி வாக்கியத்தில் ஆனந்தாதியோகத்தில் வர்த்தமான யோகம் ஆகும். இதன் பலன் திரவிய இலாபம். ஆகவே, இந்த நாளில் நீங்கள் புதுக் கணக்குப் போட புதிய ஒப்பந்தம் செய்ய எல்லாவகையான சுப முயற்சிகளுக்கும் ஏற்ற நாள். காலை மணி 6 முதல் 7 மணிக்குள்ளாக எந்த சுப காரியத்திற்கும் ஏற்ற நாள என்பதால், உங்கள்

வாழ்நாளில் எல்லாக்காரியங்களுக்கும் பயன் படுத்தலாம். திங்கட்கிழமையில் ரேவதிநட்சத்திரம் வரும் நாள் சித்த யோகம் உதயமாகும். ஆனந்தாதியோகத்தில் மாதங்க யோகம் வரும்.

இது உங்களுக்கு நன்மை இல்லை. அவசியமானால் காலை மணி 6.00 முதல் 6. 45 க்குள் சுபகாரியங்கள் செய்யலாம். வியாழக்கிழமையில் ரேவதி நட்சத்திரம்வரும் நாள் சித்த யோகம் உதயமாகும். ஆனந்தாதி யோகத்தில் அமிர்தயோகம் உண்டாகும். இந்தநாளில் அரசாங்க சம்பந்தமான எல்லா முயற்சிகளுக்கும் ஏற்றநாள். தேர்தல் வேலைகள் ஆரம்பம் செய்ய, தொழில் சம்பந்தமான வகைக்குளழுத்துசம்பந்தமான முயற்சிகளுக்கு இன்னும் பல வகையானசுபங்களுக்கும்உரிய நாளாகும். வாழ்க்கை முழுவதும் எப்போதும் பயன்படுத்தலாம், மற்றும் இதர சுபகாரியங்களுக்கும்ஏற்றநாள். இது காலை சூரியன் உதயம் முதல் ஒரு மணிநேரத்துக்குள்எல்லா விதமான சுபகாரியக்களுக்கும் ஏற்றநாள். வெள்ளிக்கிழமையில் ரேவதி நட்சத்திரம் வரும்நாள் அமிர்த யோகம்உதயமாகும். ஆனந்தாதி யோகத்தில் ஸ்ரீ வத்சயோகம் உள்ளநாள, இதன் பலன் இலட்சுமி யோக சித்தி, உங்களுக்கு எல்லா விதமான சுபங்கள செய்யவும்

## டாக்டர் எம்.வி.ராமன்

சோதிட வித்தகர்

ஏற்ற நாள். காலை மணி 6.00 முதல் 7. 00 மணிக்குள்ளாக எல்லா சுபகாரியங்களுக்கும் ஏற்றநாள். இத்துடன் சூரியன் உதய நிமிடங்களைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

திருவோணம் நட்சத்திரத்துக்கு வேதை (ஆகாதநட்சத்திரம்) - திருவாதிரை, திருமணம் செய்ய தொழில் கூட்டு சேர்க்க உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள 6 (ரச்சு), அவைகள்- ரோகிணி, திருவா

திரை, அத்தம், சுவாதி, திருவோணம், சதயம், ஆகியவைகள், அதிர்ஷ்டமலர் -அல்லி, அனுகூல தெய்வம்-பார்வதி, அதிர்ஷ்டக்கல்- முத்து, நீலக்கல், அதிர்ஷ்ட எண்- 4 .

அவிட்டம் நட்சத்திரம் 1-2 பாதங்கள்

இந்த அவிட்டம் நட்சத்திரம் உடையவர்களுக்கு அச்சுவினி நட்சத்திரம் எப்போதும் நன்மைக்குரிய நட்சத்திரம். அமாவாசை கழிந்த 4 வது நாள்எந்த நன்மைக்கும் ஏற்ற நாளல்ல. 5, 6 வது நாட்கள் நன்மைக்குரியன அதிபதி சந்திரன். இதன்பலன் கீர்த்தி, செல்வாக்கு. வியாழக்கிழமையில் அச்சுவினி நட்சத்திரம் வரும்நாள் அமிர்தயோகம் உதயமாகும். இது ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம் உள்ளநாள். இந்தநாளில் நீங்கள் எல்லா சுபகாரியங்களும் செய்யலாம். இதன் பலன் இராஜ சன்மானம். எனவே, அரசாங்க சம்பந்தமானதும் அரசியல் சம்பந்தப்பட்ட எழுத்து வகையான முயற்சிகளுக்கும் சிறப்புடையது. காலை மணி 6 முதல் 7.15க்குள் சிறப்புக்காலம். வெள்ளிக்கிழமையில் அச்சுவினி நட்சத்திரம் உதயமாகும் நாள் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் வச்சிர யோகம் உள்ள நாள். உங்களுக்கு ஆகாது எனவே இதை விலக்கவும்,

அவிட்ட நட்சத்திரகாரர்களுக்கு வேதை(ஆகாத நட்சத்திரம்) - மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம். திருமணம் செய்ய தொழில்கூட்டுசேர்க்க உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள 3, அவைகள் மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகியவைகள். மற்றைய 24 நட்சத்திரங்களும் பொருந்தும், அதிர்ஷ்டமலர்-செண்பக மலர், அனுகூல தெய்வம்-சுப்பிரமணியர், அதிர்ஷ்டக்கல்- பவளம், அதிர்ஷ்டநிறம்-சிவப்பு, அதிர்ஷ்ட எண்-5.

(தொடரும்)

## தினசரி தியானம்

### சும்மா இரு

சும்மா இருக்கச் சுகம் சுகம்
என்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங்
கேட்டும். அறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந்
தப்பியென் பேதைமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன்
அந்தோ என் விதிவசமே

-தாயுமானவர்

சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணமென்று எம்மால் அறிதற்கு எளிதோ பராபரமே.

உறையூற்றிய பால் அசையாது ஓரிடத்தில் வைக்கப்படும் பொழுது அது நல்ல தயிராகிறது. அசையாத நீர்ப் பரப்பின் மீது பொருள்களின் பிம்பம் உள்ளபடி தென்படுகிறது. ஆசையென்னும் காற்றில் அசையாத மனது, உள்ளிருக்கும் ஒண்பொருளைத் தெரிந்து கொள்ளத் தகுதியுடையதாகிறது. சும்மா இருக்குமளவு அது சுக சொரூபமாகிறது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## திருநாள் திருப்பலி

(மானிப்பாய்)

மாதகல் புனித லூர்து அன்னை ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி இன்று காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனியும், ஆசீரும் இடம் பெறும் என்று ஆலய பங்குத் தந்தை அறிவித்துள்ளார்.

(உ-232)

## கலை உலக அனுபவப் பகிர்வு

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்று வரும் நாடகப்பயிலரங்கில் இன்று பி.ப.4.00 மணிக்கு முதுபெரும்கூத்துக்கலைஞரும் நகைச்சுவை நடிகருமான எம். அலெக்ஸாண்டர் தனது கலை உலக அனுபவங்களைப் பகிர்ந்து கொளவார். (உ)

## சான்றிதழ்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் 1999 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள், இந்து கலாசாரத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால்,

மேற்படி சான்றிதழ்கள் செவ்வாய்க்கிழமை நாவலர் ஆசிரம மண்டபத்தில் இடம் பெறவுள்ள புண்ணியநாச்சியம்மையார் தின விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## 49 தேர்தல் வன்முறைகள் பதிவு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்து நேற்றுமுன்தினம் வரை 49 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றதாக தேர்தல் செயலக பிரதிப்பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்துள்ளார்.

இவற்றில் 22 சம்பவங்கள் பாரிய சம்பவங்களெனவும் ஏனையவை சிறு சம்பவங்களெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் நெடுந்தீவு உதவிஅரசஅதிபர்பிரிவில் 50 வீடுகள் அமைக்கத் திட்டம்

(நெடுந்தீவு)

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் நெடுந் தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 50 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மேற்படி 50 வீடுகளும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில், நெடுந்தீவு மத்தி ஜே/04 கிராம அலுவலர் பிரிவில் 15, மத்தி கிழக்கு ஜே-05 கிராமஅலுவலர் பிரிவில-15, நெடுந்தீவு கிழக்கு ஜே 06 கிராம அலுவலர் பிரிவில் 20 என்ற ரீதியில் வீடுகள அமைக்கப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகளை தெரிவு செய்யும் நடவடிக்கையில், நெடுந்தீவு கடற்றொழிலாளர்சங்கம், சம்பந்தப்பட்ட கிராமஅலுவலர்கள, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். (உ-82)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்தன்ஆலயவருடாந்த மஹோற்சவம் நாளை ஆரம்பமாகி 10 தினங்கள் இடம் பெறவுள்ளது. (உ)

## விலை குறைத்து நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டாம்

பெரும் போகத்தின்போது அறுவடை செய்யப்பட்ட நெல்லை கிலோ15ரூபாவுக்கு குறைவாக விற்பனை செய்ய வேண்டாமென அரசாங்கம் விவசாயிகளைக்கேட்டுள்ளது.

இதேவேளை வர்த்தகர்களும் ஒரு கிலோ நெல்லை 15 ரூபாவுக்கு குறைவாக கொள்வனவு செய்ய வேண்டாமெனவும் விவசாய கால்நடை வளர்ப்பு விவகார அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா கேட்டுள்ளார்.

விவசாயிகளிடமிருந்து வர்த்தகர்களமோசடியாகநெல்லை கொள்வனவு செய்ய முயன்றால் அறுவடை முழுவதையும்பண்டகசாலையில் தடுத்து வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-5)

## சிறு விளம்பரம்


### ஆசிரியை தேவை

தரம்1 முதல் தரம்5 வரை சகல பாடங்களும் கற்பிக்க ஆசிரியை தேவை. கல்வியங்காட்டின் 1 மைல் சுற்றாடலுக்குள் இருப்பது விருப பத்தக்கது. சுயவிபரக் கோவையை 20 02 2002 இற்கு முன் அனுப்பிவைக்கவும். தொடர்பு :விளம்பர இல. 233, 15, வெள்ளாந் தெரு, வலம்புரி.

(4500)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ சைவ போசன மணமகனுக்கு 35 வயதுக்குட்பட்ட சைவ போசன மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 234, வலம்புரி 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்.

(4701)


### இசைப்பயிற்சி

(மானிப்பாய்)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கலாசார பேரவை, உதவி அரசாங்க அதிபர் அலுவலகப் பணியாளர்கள் மத்தியில் ஓகன், மற்றும் பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகின்றது.

மேற்படி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கடமை புரியும் 30 பணியாளர்கள் இந்தஇசைப் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சிநெறிகள் 6மாதங்கள் நடைபெறுமென கலாசாரப் பேரவை தலைவர் வி.பி வேலாயுதப்பிள்ளை தெரிவித்தார்.

(உ-232)

### விளையாட்டுப் போட்டி

(சுன்னாகம்)

தெல்லிப்பழை யா. பன்னாலைசேர் கனகசபை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர் வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.1.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் நா.ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழ பதிவாளர் திருமதி நாகேந்திரராணி தங்கராஜா பிரதம விருந்தினராகவும் தெல்லிப்பழைக் கோட்டஉதவிக்கல்விப்பணிப்பாளர் கா. சந்திரபாலன் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-207)

### சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் யாழ்ப்பாணம் தண்ணீர் தாங்கியடி மற்றும் சுன்னாகம் பகுதியில் இயங்கும் அரசினர் மரவேலைப் பயிற்சிப் பாடசாலையில் ஒரு வருடகால பயிற்சியைப் பெற்று தகுதி காணப்பட்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ்ப்பாணம் தண்ணீர் தாங்கி அரசினர் மரவேலைப் பயிற்சி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் ப. செந்தில்நந்தனன்பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

(உ-5)

# அழிந்துபோன பிரதேசங்களை புனரமைக்க போதியளவு நிதி தேவை!

## ஜயலத்துக்கு புளொட் அன்ரன் மகஜர்

(யாழ்ப்பாணம்)

யுத்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ் குடாநாட்டை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரி கடந்த 12ந் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு சாவகச்சேரிப் பிரதேசசபைத் தலைவர் அன்ரன் பொன்னையா மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளார்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கடந்த இரு தசாப்த காலமாக இலங்கையில் இன யுத்தம் நடைபெறுகிறது. இவ்யுத்தமானது ஆரம்ப காலத்தில் வடக்குகிழக்குப் பகுதிகளில் மட்டும் இடம் பெற்ற யுத்தம் இன்று நாடுபூராகவும் இதன் தாக்கம் உணரப் பட்டுள்ளது. இந்த உணர்வின் வெளிப்பாடே தற்போது நடைபெற்ற அரசியல் மாற்றம் குறிப்பாக இந்த இனயுத்தத்திற்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என மக்கள் தங்களுக்கு ஆணை வழங்கியுள்ளனர் இதன் ஆரம்ப செயற்பாடுகளை தங்கள் அரசாங்கம் ஆரம்பித்துள்ளமை பாராட்டிற்குரியது.

நாட்டின் அரசாங்கம் என்பது சகல இன மக்களையும் சமமான அந்தஸ்துடன் ஆட்சி செய்தாலே மக்களினதும் வெளிநாடுகளினதும் நன் மதிப்பைப் பெறமுடியும். கடந்த காலத்தில் வடக்கு கிழக்குப் பகுதிகள் யுத்த அனர்த்தம் காரணமாக எவ்வளவோஅழிவுகளைச் சந்தித்துள்ளன இவற்றிற்கு கடந்தகால அரசு எந்தவிதமான ஒரு நடவடிக்கையையும் எடுத்ததாக இல்லை ஆனால் தென்பகுதிகளில் ஏற்பட்ட அனர்த்தங்களிற்கு உடனுக்குடன்நிவாரணம் வழங்கப்பட்டுவந்துள்ளது.

இதற்கு கடந்தகால நிகழ்வு ஒன்றினை உதாரணம் காட்டலாமென நினைக்கிறேன்.

கடந்த வருடம் கம்பகா மாவட்டத்தில் சீதுவைப்பிரதேசத்தில் பறந்து சென்றுகொண்டிருந்த உலங்குவானூர்தி (ஹெலிகொப்டர்) திடீரென மக்கள் குடியிருப்பின் மீது வீழ்ந்து நொருங்கியது இதனால் குடியிருப்பாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுகள் உடனடியாக வழங்கப்பட்டது. அதாவது ஒவ்வொன்றும் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டிற்கு ஒன்பது இலட்சம் ரூபாஎன்ற ரீதியில் நிதி வழங்கப்பட்டது வாகனம்ஒன்றின் சேதத்திற்கு உடனடியாககாப்புறுதிவழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாது சேதமான ஒருதையல் இயந்திரத்திற்குகூட புதியதொரு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. இதுதான் கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் தென்பகுதி நிலைமை.

ஆனால் வடக்கு கிழக்குப் பகுதி, தென்மராட்சிப் பிரதேசம் கடந்த கால யுத்தத்தினால் முற்றாக அழிந்துபோயுள்ளது இதற்கு நிவாரணமாக கடந்தகால அரசு என்னசெய்தது? அதாவது தென்பகுதியை ஒருவிதமாகவும் வடபகுதியை ஒரு விதமாகவும் நோக்கியுள்ளது.

கடந்தகால அரசின்ஆட்சியைப் போலல்லாது. எல்லோரும் இந்நாட்டு மக்களே என்பதனை கவனத்தில் எடுத்து தங்கள் அமைச்சு செயற்படுமென எண்ணுகிறேன். குறிப்பாக அழிந்துபோயுள்ள பிரதேசங்களை மதிப்பிடுவதற்கு தங்கள் அமைச்சில் இருந்து மதிப்பீட்டாளர்களை அனுப்பி அந்த மதிப்பீட்டிற்கு ஏற்ப நிதிகளை ஒதுக்கி ஒரு நியாயமான புனர்வாழ்வு, புனரமைப்பிற்கு ஒத்துழைப்பீர்கள் எனவும் நம்புகிறேன்

மதிப்பீடுகளிற்கு ஏற்ப மக்கள் மீளக்குடியேறும் போது ஒரு தொகுதிப் பணத்தினையாவது உடன் வழங்கி மக்களின் புனர் வாழ்விற்கு அத்திவாரம் இடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறான ஒரு செயற்பாட்டின் மூலமே பாதிக்கப்பட்ட பிரதேச மக்களிடம் இருந்து தங்கள் அரசு நன் மதிப்பைப் பெறும் என்பதே எனது கருத்தாகும். இந்த வகையில் அழிந்துபோயுள்ள தென்மராட்சி உட்பட குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களிற்கும் தங்கள் அமைச்சு மூலம் மக்களுக்கு சேவை செய்வீர்கள் எனநம்புகிறேன் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது

(இ)

### வரவு செலவுத் திட்டப் பிரேரணை 19ல் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டப் பிரேரணையை நிதி அமைச்சர் கே. என்.சொக்ஸி 19ம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதே தினத்தில்உள்ளூராட்சித் தேர்தல் சட்டத் திருத்தப் பிரேரணையும் அமைச்சர் அலிக் அலுவிகாரையினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(வ)

### கல்வியியல் கல்லூரி புதிய மாணவர்களுக்கு நாளை கூட்டம்

(யாழ்ப்பகணம்)

யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கல்வியியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களைக் கலந்துகொள்ளுமாறு பீடாதிபதி கேட்டுள்ளார். (வ)

### பாராளுமன்றக் குழு கூட்டம நாளை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்சிய தேசியக்கட்சி ஆகியவற்றிளிபாராளுமன்றக்குழுக்கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இவ்விரு கட்சிகளினதும் பாராளுமளிறக்குழுக் கூட்டத்தில் 19ம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உள்ளூராட்சி தேர்தல் திருத்த மசோதா தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(வ)

## உள்ளூராட்சித் தேர்தல் கடமைக்காக வடக்கு-கிழக்கு பொலிஸார் தென்பகுதிக்கு அழைக்கப்படுவர்!

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தலில் இடம்பெற்றது போன்ற தேர்தல் வன்முறைகள் உள்ளூராட்சித் தேர்தல்களில் இடம் பெறாவண்ணம் பார்த்துக் கொள்வதற்கு பொலிஸார் பாதுகாப்புக்கடமைகளில் தீவிரமாக ஈடுபடவேண்டுமென்றும் தேர்தலுக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

மார்ச்மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பத்திரிகையாளர் மகாநாடு ஒன்று நடைபெற்றது. இப்பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகையாளர் மகாநாட்டில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மிஸ்கினும் கலந்து கொண்டார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் யுத்தநிறுத்தம் ஏற்பட்டுள்ளதால் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பொலிஸாரை தென்னிலங்கைக்கு அழைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இப்பத்திரிகையாளர் மகாநாடு கொழும்பு பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. (வ)

## இடதுசாரிகளை இணைத்து விரைவில் ஆட்சி அமைப்போம்

### எதிர்க் கட்சித் தலைவர் சூளுரை

(கொழும்பு)

நாட்டில் உள்ளமுற்போக்கு சக்திகளையும், இடதுசாரிக் கட்சிகளையும் இணைத்து புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் காலம்வெகு தூரத்தில் இல்லைஎன்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த இராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.

அமரர்பண்டாரநாயக்காவின் சமாதிக்கு மலர் மாலைஅணிவித்து அஞ்சலி செலுத்திய பின் உரையாற்றுகையிலேயே மஹிந்த இராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கிராமப்புற மக்களிடையே பிரசாரம் செய்துகட்சியை வளர்த்தெடுப்பதுடன் நாட்டில் உள்ள இடதுசாரிக் கட்சிகள், மற்றும் முற்போக்கு சக்திகளை இணைத்து ஆட்சியமைக்கவும் தயாராக உள்ளோம் இதற்கான காலம் கனிந்துள்ளது என்றும் கூறினார்.

(வ)

### அமைச்சர் மஹிந்த சவுதி பயணம்

(கொழும்பு)

கடற்தொழில் கப்பல் வளத்துறை அமைச்சர் மஹிந்த விஜயசேகர சவுதி அரேபியாவுக்கு நேற்று பயணமாகியுள்ளார்.

இரு நாடுகள் எதிர்நோக்கும் மீன்பிடித்துறை பிரச்சினைகள் தொடர்பாக சவுதி அரேபிய விவசாய மற்றும் கடற்தொழில் அமைச்சர் சஹிட்முகமட் அல் விகாரியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன் கடற் தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்பு வழங்கவுள்ள சவுதி அரேபிய முதலீட்டாளர்களைச் சந்தித்தும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

(ந-4)

## உள்ளூராட்சி திருத்த சட்டமூலம் உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கு அறிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சித் திருத்த சட்டமூலம் தொடர்பாக ஜனாதிபதி கேட்டிருந்தஅறிக்கையை உயர்நீதிமன்றம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும், சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

19ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபடவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அரசியல் யாப்புக்கு முரணானதா? இல்லையா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றத்தை ஜனாதிபதி கேட்டிருந்தார்.

இது தொடர்பாக உயர் நீதிமன்றம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில்;

உள்ளூராட்சி திருத்த சட்டம் மூலம் அரசியல் யாப்புக்கு சாதகமாகவுள்ளதாகத் தெரிவித்துளது.

இத்தேர்தல் சட்டமூலம் நிறைவேற்றப்படும்பட்சத்தில் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்றும் ஏனைய உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் நடத்தப்படும் என்றும்தெரிவிக்கப்படுகிறது.

(வ)

### கல்வியியல்கல்லூரிக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரிக்கென கோப்பாய் இராசபாதை வீதியில் உள்ள காணியில் விரைவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

சுமார் 35 மில்லியன் ரூபா செலவில் கட்டப்படவுள்ள இக்கட்டட வேலைகள் முடிவடைந்த பின்னர் கல்வியியல் கல்லூரிக்கு கூடுதல் மாணவர்களை அனுமதிக்கக் கூடியதாக இருக்கும் எனக் கல்வியியல் கல்லூரிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(வ)

# செய்தித் துளிகள்

## பயிற்சிப் பட்டறையில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைமாவட்ட பாதுகாவலன் பத்திரிகையும் சமூகத் தொடர்பு ஆணைக்குழுவும் இணைந்து நடத்தும் 'ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்' 3 நாள பயிற்சிப்பட்டறையின் இறுதிநாளானஇன்று திரைப்பட இயக்கம், திரைப்பட திரை இசை தொடர்பான விரிவுரைகள் இடம் பெறவுள்ளன.

முடிவில், பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டவர்களுக்கு யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருள்திரு ஜே. பி. இ. செல்வராஜா சான்றிதழ்களை வழங்கவுள்ளார். (உ)

## சாவகச்சேரியில் பணிமனை திறக்கதிட்டம்

(தென்மராட்சி)

தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் தனது பணிமனை ஒன்றினை சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள தனியார் இல்லமொன்றில் அமைக்கவுள்ளார்.

சாவகச்சேரிப் பிரதேசத்தில் மீளவும் குடியமர்ந்து வரும் மக்களின் பிரச்சினைகளுக்கு உதவும் பொருட்டே இப் பணிமனை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது. (உ-77)

## மின்சக்தி அமைச்சருக்கு கடிதம்

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் 77 ரூபா விலையில் விற்பனை செய்யப்படும் பெற்றோலின் விலையை நியாயமான அளவுக்கு குறைக்குமாறு கோரி எரி பொருள் மின்சக்தி அமைச்சர் கருஜெயசூரியாவுக்கு யாழ்.மாவட்ட விவசாயநுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர்கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார். (உ-223)

## குடும்பஸ்தர் தற்கொலை

(மந்திகை)

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக மதுபானத்துடன் கிருமிநாசினியை கலந்து குடித்த குடும்பஸ்தர் ஒருவர் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் கரணவாய் வடக்கைச்சேர்ந்த 52 வயது நபரேமரணமடைந்துளளார். (உ-5,23)

## அபிவிருத்தித் தொண்டர்களுக்கான கலந்துரையாடல்

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இரண்டாம் கட்ட அபிவிருத்தி தொண்டர்களுக்கான பயிற்சி நெறியை மீள ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம் திகதி புதனகிழமை மு.ப.10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுளளது.

இப் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்ற அபிவிருத்தி தொண்டர்கள, போதனாசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (செ-23)

## நிர்வாகசபை தெரிவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பருத்தியடைப்பு சனசமூக நிலையத்தின்நிர்வாகசபைஅண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிர்வாக சபையின் தலைவராக தி.பிறேமநாதன், செயலாளராக கு ஞானேஸ்தரன், பொருளாளராக சி.யோகேஸ்வரன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக 8 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (உ-75)

## காணி கையளிப்பு

(மந்திகை)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச செயலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கவென கொள்வனவு செய்யப்பட்டகாணியை, அரச அதிபர் கே.சண்முகநாதனிடம் கையளிக்கும் சம்பிரதாய நிகழ்வு நாளை திங்கட்கிழமை மு.ப 10.00மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-23)

## இசை நாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் தவக்காலத் திருப்பாடல்கள் இசை நாடா வெளியீட்டு விழா இன்று மறைக்கல்வி நிலையத்தில் இடமபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டகுருமுதல்வர் ஜே. பி. செல்வராஜா அடிகளாரும் ஆய்வுரையை திருக்குடும்ப கன்னியர்மடம் ஆசிரியர்ஏ. ஜோண்சன் ராஜ்குயாரும்ஏற்புரையைஹென்றியரசர் கல்லூரி ஆசிரியர் ஆர். விஜயகுமாரும் நிகழ்த்தவுள்ளனர்.

நன்றியுரையை அருட்சகோதரி நெவிஸ்லடிஸ் லொஸ் ஆற்றவுள்ளார் .(உ)

## இலவசபாடநூல் விநியோகம்

(மந்திகை)

தென்மராட்சி கல்விவலய பாடசாலைக்குரிய இலவச பாடநூல்களை இதுவரை பெறாத பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி வரணி மகா வித்தியாலயத்தில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார். (உ-5-23)

## பேருந்துச் சேவை அதிகரிப்பு

(அல்லாரை)

மிருசுவில் யாழ்ப்பாணம் இடையேயான பேருந்துச் சேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தனியார் சிற்றூர்திகளும் சேவையில் ஈடுபடுவதால மீளக்குடியமர்ந்த மக்கள தமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றி வருகின்றனர். (உ-210)

## பாம்பினால் கடியுண்டார்

(கலவியங்காடு)

வயலில் இருந்த வைக்கோற்கற்றையை எடுக்க முற்பட்டவர் பாம்பினால் கடியுண்டார்.

நாயன் மார் கட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான செல்வராசா ராதாலட்சுமி (வயது-30) என்ற பெண்ணே பாம்பு கடிக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிககப்பட்டுள்ளார். (உ-245,5)

# வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் வடக்கு - கிழக்கில் அதிகம்

## ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதி

(திருகோணமலை)

தேசிய மட்டத்திலும் பார்க்க வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அதிகரித்து காணப்படுகின்றது என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூனி கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கு சமூகப் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் பிரதான முகாமைத்துவ அலுவலகத்தை திறந்துவைத்துப் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது;

மாதம் ஆயிரம் ரூபாவுக்குக் கீழ் வருமானம் பெறுவோரின் எண்ணிக்கை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 70 சதவீதம் வரை காணப்படுகிறது.

சீரழிந்து போன வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும், பிரதேசத்தின் பொருளாதாரத்தை புனர் நிர்மாணம் செய்வதற்காகவுமே இவ் அபிவிருத்தித் திட்டம்செயற்படுத்தப்பட விருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (உ-3)

## பாதிக்கப்பட்ட இலங்கை பெண்களின் பயன்கருதி ஜப்பான் 2 கோடி நிதி உதவி

(கொழும்பு)

பாதிக்கப்பட்டவறிய இலங்கைப் பெண்களுக்கு உதவுவதற்கென ஜப்பானிய அரசு 2 கோடி 82 லட்சம் டொலர்களை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்று நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும், முதலாளி வர்க்கங்களினால் துன்பப்படுவோருக்கும் இந் நிதி பயன் படுத்தப்படவுள்ளது.

இவ்வாறான சூழ்நிலைகளினாலும் வேறுபல வன்செயல்களினாலும் போர் நடவடிக்கைகளினாலும் பாதிக்கப்பட்டோர்களுக்கு கூட உதவிகளைசெய்துகொடுத்தல், மன இயல்புரீதியான ஆலோசனைகளை வழங்குதல், வைத்திய உதவிகள் போன்றன இத்திட்டத்தின் கீழ் அமையும்.

இவ் ஒப்பந்தத்தில் நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்தாவும், உலக வங்கியின் பணிப்பாளர் மரியானா பெரேடோனோனாவும் கைச்சாத்திட்டனர். (உ-8)

## இராசி பலன்

(17-2-2002)
(மாசி 5, ஞாயிறு)
பஞ்சமி மு.இ 11.11 வரை
ரேவதி பி.ப 1.25 வரை
ராகுகாலம் 5.03-6.33
நல்ல நேரம் 9.33-11.03
அமிர்த சித்தம்

### மேடம்

ஜனவசியம், நல்ல முயற்சி போசன சுகம், புதிய பொருள் சேர்க்கை.

### இடபம்

சயன சுகக் குறைவு, காரிய தாமதம், உணர்ச்சிவசப் படல், வாக்குப் பலிதம்.

### மிதுனம்

காரிய நன்மை, தனவரவு, குடும்ப நன்மை, மனமகிழ்ச்சி.

### கடகம்

அதிக பிரயாசை, சுப நிகழ்வு, உற்சாகம், காரியம் நிறைவேறும்.

### சிங்கம்

புதிய திட்டமிடல், அச்சமான நிலை, கட்டுப்பாடு முயற்சி தாமதம்.

### கன்னி

காரிய தாமதம், உறவினர் மனஸ்தாபம், தொழில் விருத்தி, போசன சுகம்.

### துலாம்

சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை, நண்பர்கள சந்திப்பு.

### விருச்சிகம்

காரியம் கைகூடும், சந்தோசமான சம்பவம், தொழில் முன்னேற்றம், உடல் நலம்.

### தனுசு

குடும்பக்கவலை, முயற்சி தாமதம், சகோதரர் உதவி, அதிகாரம்.

### மகரம்

உடல் சோர்வு, ரோகபயம், காரிய தாமதம், அற்பர் உறவு.

### கும்பம்

அந்நியர் சந்திப்பு, காரிய அனுகூலம், வாக்குப் பலிதம், சகோதரர் உதவி.

### மீனம்

தனவிரயம், வீண் வார்த்தை, காரியதாமதம், மாதர் நட்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்.

## சிங்கப்பூர்- இந்திய வர்த்தக மையமாக இலங்கை இருக்கும்

(கோலாலம்பூர்)

சிங்கப்பூருக்கும் தென்இந்தியா விற்குமான வர்த்தக மையமாக இலங்கை இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

மூன்று நாள் விஜயத்தை மேற் கொண்டு சிங்கப் பூர் பயணமாகியுள்ள பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிற்கும், சிங்கப்பூர் உதவிப்பிரதமர் லீற்எங் புழு மற்றும் அமைச்சர்களுக்கிடையே நேற்று முனதினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இக்கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர்வர்த்தக தொழிற்துறைஅமைச்சர் இப்பேச்சுவாாத்தைகுறித்து செய்தியாளர்களிடம் தெரிவிக்கும் போதுமன்னாருக்கும் தென்னிந்தியாவிற்கும்மிடையேபாலமொன்று அமைக்கதிட்டமிடப்பட்டிருக்கின்றது.

இதன் மூலம் சிங்கப்பூருக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான பெரிய வர்த்தக தொடர்புகளை மேற்கொளவதற்கு இலங்கைமைய இருக்கும் இவ்வாறு இலங்கை மையமாக மாக இருக்க சம்மதிக்குமானால்அந்நாட்டிலுள்ளவிமானக பல் பிரச்சினைகளுக்கு சிங்கப்பூர் தீர்வளிக்கும் என தெரிவித்தார்.

இவ்விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நிபுணர்கள குழுவொன்று மிகவிரைவில்இலங்கை வரவுள்ளதாகவும் இந்நடவடிக்கைகளுக்கு இலங்கைப்பிரதமர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் சிங்கப்பூர் வர்த்தக தொழிற்துறை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## கிறிக்கெற் அணித் தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படவுள்ள, மென்பந்து கிறிக்கெற் சுற்றுப்போட்டிக்கான, கழக அணி ஒழுங்குத் தெரிவு இன்று மாலை 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பித்த கழகங்கள் அணித்தெரிவுக்காக கழக உறுப்பினர் ஒருவரை கல்லூரிக்கு அனுப்பிவைக்குமாறு கேகப்பட்டுள்ளனர். (இ)

## மருந்தகத்தில் திருட்டு

(கல்வியங்காடு)

நீர்வேலிப்பகுதி மருந்தகம் ஒன்றில் இருந்து கடந்த புதனன்று இரவு, 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பால்மா மற்றும் மருந்து வகைகளை கள்வர் களவாடிச்சென்றுள்ளனர்.

நீர்வேலிக்கந்தசாமி கோவிலடியிலுள்ள வி. யுகராஜ் என்பவருக்குச் சொந்தமான அபிராமி மருந்தகத்திலேயே மேற்படி களவு இடம் பெற்றுள்ளது. (உ-245)

## விளையாட்டுப் போட்டி

(சுன்னாகம்)

யா-சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று பி. ப. 1.30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் பாடசாலை அதிபர் செல்வி அ. றோசறி ஜெயநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தன் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ2-07)

## பாடநூல் விநியோகம்

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்று இடம்பெயர்வின் பின்னர் பருத்தித்துறை, காவெட்டி கோட்டங்களில் கல்விபயிலும் மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள எதிர் வரும் 20, 21 ஆம் திகதிகளில் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இப்பாட நூல்களை அந்தந்தபாடசாலை அதிபர்களைவந்து பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார். (உ-5-23)

## இன்று ஒரு தகவல்

# காலன் வருவதினைக்கண்டு கண்மூடத் தேவையில்லை

ஒன்றுமே அறியாத எலி, பூனையின் வருகையைப் பார்த்துப் பயத்தால் தனது கண்களை மூடிக்கொண்டு, 'பூனை என்னை நோக்கி இப்பொழுது வரவில்லை' என எண்ணுகிறது. ஆனால் பூனைஎலியின் அருகில் வந்து கழுத்தை கவ்விப் பிடித்துச் செல்கிறது. அதுபோல, 'காலன் என்பவன் வெகு தொலைவில் இருக்கிறான். இப்போதைக்கு நமக்கு மரணம் என்பது வரப்போவதில்லை' என்ற எண்ணத்தில் மனிதன்வாழ்ந்துகொண்டிருக்கிறான். காலன் அவனது வாழ்வில் எந்த நேரத்திலும் அடி எடுத்து வந்துவிடுவான் என்பதை அவன் மறந்து விடுகிறான். மேலும் அணு ஆயுதம் என்ற பூனையை அதாவது மகா வினாசத்தைக் கண்கள் முன்னேபார்த்தும் சிலர் கண்களை மூடிக்கொண்டு அறியாமையிலேயே இருந்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட அறியாத எலிபோல ஆவதினால்அவர்களின்மரணத்திற்கு அவர்களே காரணமாகின்றார்கள். நாம் மரணத்தைக் கண்டு பயந்துகொண்டு அழிவைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும் என்பது இதன் பொருள் அல்ல. ஆனால், ஆத்மீகவாழ்வில்சோம்பேறித்தனம், விளையாட்டுத்தனம், அலட்சியம் ஆகியவற்றை விட்டு விடுங்கள். காலன் எச்சமயத்திலும் வரலாம். ஆகவே நாம் ஞானம், யோகம் என்ற இரு இறக்கைகளின் உதவிகொண்டு உயரே பறக்கும்நேரம்இதுவாகும். ●

நன்றி
தெய்வீக குண பூங்கொத்து

# இலங்கை அரசாங்கம் வடபகுதி இடம் பெயர்முகாம்களுக்கு வழங்கும்நிவாரணம் தரமானவை

## ஐ.நா. அ. உயர்ஸ்தானிகராலயம் தெரிவிப்பு

(கொழும்பு)
வடபகுதியிலுள்ள இடம் பெயர் முகாம்களுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கும் நிவாரணம் தரமானவை யென்று ஐக்கியநாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இடம் பெயர்ந்தவர்களுக்கான உணவு, உடை, மலசல கூடவசதி, வீடமைப்பு, போக்கு வரத்து வசதி, பாதுகாப்பு போன்றவற்றை கவனத்திற் கொள்ளும் போது கடந்த எட்டு ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் இவ்விடயங்களில் நன்கு கவனம் செலுத்தியுள்ளது.

இவ் வமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் நேற்று முன்தினம் வவுனியா பிரதேசத்திலுள்ள இடம் பெயர்முகாம்களுக்கு விஜயம் செய்த பொழுதே இதனைத் தெரிவித்துள்ளனர்.

வேறு நாடுகளை விடவும் இடம் பெயர்ந்தவர்களில் இலங்கைஅரசாங்கம் காட்டும் அக்கறை உன்னதமானது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (செ)

## குடிநீர் பெறுவதில் சிரமம்

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறைப் பகுதி மக்கள் குடிநீர் பெற பெரிதும் கஷ்டங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலந்தைக்குளம் வீதி, வில்வந்தெரு, புங்கங்குளம்வீதி, சந்தனமாதா கோவில்வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்தமக்களே குடிநீருக்காக தூர இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (செ.23)

## புனித பிரதேசமாக கல்முனை பிரகடனம்?

(மட்டக்களப்பு)
கல்முனை கண்ணகை அம்மன் ஆலயம் மற்றும் கல்முனை நாகூர் தர்கா பள்ளிவாசல் என்பன உள்ளடங்கிய பகுதி புனித பிரதேசமாகப் பிரகடனப் படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.கறீஸ் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகரசபை அபிவிருத்தி தொடர்பான உயர் மட்ட மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். (உ-5)

## இறுதிநாள்நிகழ்வுகள்

(ஏழாலை)
தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று பி. ப. 1.00 மணிக்கு பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம்போல் தலைமையில் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. (உ-12)

## இலவச மருத்துவமுகாம்

(உரும்பிராய்)
உரும்பிராய் லயன்ஸ்கழகத்தினால், இன்று உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயத்தில் இலவச மருத்துவமுகாம் நடத்தப்படவுள்ளது.

கண்குறைபாடுகள், நீரிழிவு நோய்களுக்கான பரிசோதனைகளும் இலவச மருத்துவ சிகிச்சைகளும் இங்கு அளிக்கப்படவுள்ளன. (உ-215)

## படையினர் வசமுள்ள உழவு இயந்திரத்தை மீளப்பெற முயற்சி

(தென்மராட்சி)
சாவகச்சேரியில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது பாதுகாப்புப் படையினரால் வசப்படுத்தப்பட்ட சாவகச்சேரிநகரசபைக்குச் சொந்தமான உழவுஇயந்திரத்தினை மீளவும் பெறுவதற்கான முயற்சிகளை சபை மேற்கொண்டு வருகின்றது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் துப்பரவுப்பணிகளைமேற்கொள்ளஉழவுஇயந்திரம்ஒன்று இல்லாமையினால் பெரும்கஷ்டங்கள் எதிர் நோக்கப்படுவதாக சபை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (உ-77)

## கோழித்தீன் தட்டுப்பாடு

(மந்திகை)
வடமராட்சி பகுதிகளில் கோழித்தீனுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கோழிவளர்ப்போர் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

முட்டைத்தீன் இல்லாது கோழிகள், முட்டை இடுவதும் குறைவடைந்துள்ளதாகவும் கோழிவளர்ப்போர் கவலை தெரிவித்துள்ளனர். (செ-23)

## ஆசியபிராந்திய நாடுகளுடன் பொருளாதார உறவுகளை பலப்படுத்த ரணில் ஆர்வம்

(கொழும்பு)
பேராச் சூழல் காரணமாக சின்னாபின்னப்படுத்தப்பட்டிருக்கும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டுமானால் இந்தியா, சிங்கப்பூர் போன்ற பிராந்திய நாடுகளுடன் வர்த்தக உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிங்கப்பூருக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அங்கு சிங்கப்பூர் முதலீட்டாளர்கள், வர்த்தக சமூகத்தினர் மத்தியில் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கையில் தற்போது நடைமுறையில் இருந்து வரும் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான கட்டுப்பாடுகளை நீக்குவதன் மூலமே பொருளாதார அபிவிருத்தியில் சில ஆக்கபூர்வமான முடிவுகளை எடுக்கமுடியும்.

பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்தும் நோக்கிலும் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும் அரசியல் சார்பற்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## விவசாயிகள் கோரிக்கை

(கல்வயல்)
சாவகச்சேரி எல்லைக்குட்பட்ட ஜே-305கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நன்செய் புன்செய் நிலங்களில் உள்ள மிதிவெடிகள் கண்ணிவெடிகள் என்பவற்றை அகற்றி தமது வழமையான நடவடிக்கைகளை ஆரம்பிக்க உதவுமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-11)

## யுத்த அழிவுகளை ரவிராஜ் எம்.பி. பார்வை

(தென்மராட்சி)
தமிழர் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் நேற்று முன்தினம் மட்டுவில், கல்வயல், நுணாவில் பகுதிகளுக்கு விஜயம் செய்து அப்பகுதியில் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிட்டார்.

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அப்பகுதியில் மீளவும் குடியமர்ந்திருக்கும் மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகள், பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டார்.

மேற்படி பாடசாலையின் ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு அலுமாரி இல்லாமல் இருப்பது பற்றி அதிபரால் எடுத்துக் கூறப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலைக்கு ஒரு உருக்கு அலுமாரியை அன்பளிப்புச் செய்வதாகவும் ரவிராஜ் எம்.பி. வாக்குறுதியளித்திருந்தார்.

கிராம சேவையாளர்கள் க. வாமதேவன், வே. துரைசிங்கம் ஆகியோரும கூடச் சென்றிருந்தனர். (உ-77)

## மாணவி காயம்

(உரும்பிராய்)
உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில் வசாவிளான் மத்தியமகாவித்தியாலய மாணவி சி.கார்த்திகா என்பவரே காயமடைந்துயாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ந-215-4)

## மாணவர்பணியை மதிப்பது பாதசாரிகள் கடமை

### மக்கள் நலன்புரிச் சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
பாடசாலை மாணவர்களின் வீதிப்போக்குவரத்து கண்காணிப்புச் சேவையினை மதித்து அவர்கள் காட்டும் சைகைகளுக்கு மதிப்பளித்து மாணவர்களின் மனதை வேதனைப்படுத்தாதவாறு நடக்குமாறு, சகல பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டுநர்களை மக்கள் நலன் புரிச்சங்க போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்,

மக்கள் நலன் புரிச் சங்க போக்குவரத்து பாதுகாப்பு பிரிவினர் பாடசாலை மாணவர்களுக்கு வீதி ஒழுங்குமுறையினை நடத்தி ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்களைக் கொண்டு போக்குவரத்து பாதுகாப்பு பிரிவினரை அமைத்துள்ளனர்.

அத்துடன் பிரதான வீதிகளுக்கு அண்மையில் இருக்கும் அந்தந்த மாணவர்களை கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் வீதி விபத்துகளை தடுக்கும் முகமாக பாடசாலை வாயிலுக்கு முன்பாக வீதி போக்குவரத்து சேவையினை ஆற்றி வருகின்றனர்.

எனவே அவர்களின் பணிக்கு மதிப்பளித்து வீண் உயிராபத்தைத் தடுக்க நாம் முன் வர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## மிதிவெடிஅகற்றும் பணியில் பாதுகாப்பு படையினர்

(தென்மராட்சி)
மட்டுவில் மகாவித்தியாலயத்தில் மிதிவெடிகள அகற்றும் பணியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளதாக அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இப்பணி பூர்த்தியாக்கப்பட்டதும் வித்தியாலயத்தில் கல்விப்பணியை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அதிபர் குறிப்பிட்டார். (உ-77)

## அடுத்தடுத்த வீடுகளில் திருட்டு

(யாழ்ப்பாணம்)
கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை அடுத்தடுத்த வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவத்தில் ஒன்று முறியடிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை 4.45 மணியளவில் ஓர் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த, பெண்கள துவிச்சக்கர வண்டியை களவாடிச் செல்ல முற்பட்ட வேளை அயலவர்கள் அம்முயற்சியை முறியடித்தனர்.

பின்னர் அடுத்த வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் 2 வயதுச் சிறுவனின் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர். (உ-19)

## டிறிபேக் கல்லூரியின் சேத விபரங்கள் மதிப்பீடு

(தென்மராட்சி)
யுத்தத்தினால் முற்றாகச் சேதமடைந்துள்ள சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி யின் சேத விபரங்களை தென்மராட்சி கல்வி வலய அதிகாரிகள் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டு, மதிப்பீடு செய்துள்ளதாக கல்லூரி அதிபர் எம். நாகேந்திரராஜா தெரிவித்தார்.

இம்மதிப்பீட்டுக்குழுவில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். பிறேமகாந்தன், உதவிக் கல்விப்பணிப்பாளர் கையிலாயபிள்ளைமற்றும்தொழில்நுட்ப உத்தியோகத்தரும் அடங்கியிருந்தனர். (உ-77

## சிந்தனைக்கு விருந்து

### தரமில்லாப் பேச்சு

குறித்துச் சிலரைக் குறைத்திழித்துப் பேசல்
குறித்தநே ரங்கடந்து பேசல் -குறித்த
அவையினுக் கொவ்வா தவற்றினைப் பேசல்
இவைதரமில் பேச்சுக்களாம்.

'பழையவன்'

# பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் ஆயுதத்தை பெருக்குகிறது

## அமெரிக்காமீது ஆஸ்திரிய அரசியல்வாதி குற்றச்சாட்டு

(வியன்னா)

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில் அமெரிக்கா ஆயுத உற்பத்தியை அதிசரிப்பதற்காகவே ஈராக் மீது குற்றம் சாட்டி வருவதாக ஈராக் சென்று திரும்பிய ஆஸ்திரிய வலது சாரி அரசியல்வாதியான ஜோர்ஜ் ஹைடர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிற்கான தனது விஜயம் மனிதாபிமான நோக்கம் கொண்டது என்றும் அங்கு லூக்கேமியா எனும் இரத்தப் புற்று நோயால் வாடும் சிறுவர்களுக்கு உதவுவதற்காக இரத்த வங்கிக்கு தேவையான உபகரணங்களை தான் வழங்கியதாகவும் அவர் கூறியுள்ளகிடன்,

து

ஈராக்கில் சிறுவர்களும் வயோதிபர்களும் படும் துன்பங்களை முடிவுக்கு கொண்டுவர பாக்தாத் மீதான தடைக நீக்கப்பட வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுஸைனை, ஹைடர் சந்தித்து உரையாடியதை அமெரிக்க இராஜாங்க அமைச்சு கண்டித்துள்ளது. (உ-3)

## ஜேர்மனி வெளிநாட்டமைச்சர் ஜெருசலேம் விஜயம்

(பெர்லின்)

ஜேர்மனியில் வெளிநாட்டமைச்சர் ஜோஸ்கா பிஷர் இவ்வாரம் ஜெருசலேம்செல்லவுள்ளார்.

ஜெருசலேத்தில் இடம்பெற்றுவரும் பலஸ்தீன-இஸ்ரேல் நாடுகளுக்கிடையிலான வன்செயல்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதே அவரது விஜயத்திற்கான நோக்கம் என கூறப்படுகின்றது. (உ-3)

# உலக தரிசனம்

## அமெரிக்கா தலையிட இந்தியா அனுமதியாது

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் பேச்சு வார்த்தை நடைபெறுவதற்கு அமெரிக்கா உதவுமென அந்நாட்டு அதிபர் புஷ் தெரிவித்த கருத்துக்கு இந்தியா மறுப்புத் தெரிவித்துள்ளது.

இந்திய, பாகிஸ்தான் பிரச்சினைகள இருதரப்பு சம்பந்தப்பட்ட விடயம் இதில் அமெரிக்கா தலையிட இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்று இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரு நாடுகளையும் பேச்சு வார்த்தை மேசைக்கு கொண்டுவர அமெரிக்கா தொடர்ந்து பாடுபடுமென்று புஷ் உறுதிபட தெரிவித்துள்ளார். (உ-5)

# இந்தியா கோரும் 20 பேரையும் பாகிஸ்தான் ஒப்படைக்காது

## பாகிஸ்தான் ஜனாதிபதி தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

இந்தியா தன்னிடம் ஒப்படைக்கும்படி கோரிய 20 பேரையும் அந்நாட்டிடம் ஒப்படைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த முஷாரப் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், இந்தியா கோரும் 20 பேரும் பாகிஸ்தானில் இல்லை அவ்வாறான நிலையில் நாம் எப்படி அந்த 2 பேரையும் பாகிஸ்தானிடம் ஒப்படைக்க முடியுமென்று கேள்வி எழுப்பினார்.

இந்தியாவுடன் காஷ்மீர் பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தையில் ஈடுபடும்போது இந்தியாவின் இந்த கோரிக்கை தொடர்பாகவும் ஆராய முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## போதைப் பொருள் கடத்த முயன்ற மாது கைது

(பொலிவியா)

பொத்தான்களுக்குள் கொக்கேயின் என்னும் போதைப் பொருளை கடத்த முயன்ற மாது ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிவியா நாட்டுப்பெண்ணொருவர் பொத்தான்களுக்குள் கொக்கேயினை வைத்து அதனைஆடைகளில்பொருத்தி கடத்திவந்தபோது ஸ்பெயின் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பத்துஉடைகளில்283பொத்தான்களை பொருத்தி இரண்டரைக் கிலோ நிறையுள்ள கொக்கேயினை கடத்த முயற்சி செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)




## முகமது அஸாருதீன் முதலாம் இடத்தில்

(புதுடில்லி)

அதிக,ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்றோர் வரிசையில் இந்திய அணியின் முன்னாள் தலைவர் முஹம்மது அஸாருதீன் முதலிடத்தில் உள்ளார்.

அவர் 334 ஒரு நாள் போட்டிகளில் கலந்து கொண்டு ந்த சாதனையைப் படைத்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணிவீரர் ஸ்ரீவ்வோ 325, ஒரு நாள் போட்டிகளில் கலந்து கொண்டு இரண்டாம் இடத்திலும், பாகிஸ்தான் அணித் தலைவர் வஸீம் அக்ரம் 323 ஒரு நாள் போட்டிகளில் கலந்து கொண்டு மூன்றாம் இடத்திலும் உள்ளனா. (உ-5)

## ஒருநாள் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி வெற்றி

(நியூஸிலாந்து)

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுளளது.

கிரைச்சேர்சிலில் இடம் பெற்ற இவ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியினர் 40.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணியினர் 38.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணிசார்பாக நிக்னைட் 73 ஓட்டங்களையும், நியூஸிலாந்து அணிசார்பாக நேதன் ஆஸில் 67 ஓட்டங்களையும் அதிகூடிய ஓட்டமாக பெறுறுக் கொண்டனர். (உ-5-10)

கோப்பாய் கோட்ட பாடசாலைகளில்

## கரப்பந்தாட்ட சுற்று போட்டி நாளை ஆரம்பம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19 வயதுப் பிரிவு மாணவர்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

நாளைய தினம் பி.ப 2.00 மணிக்கு யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் பி.ப 2.00 மணிக்கு 15 வயதுப் பிரிவில் யா அச்சுவேலி மத்திய கல்லூரி எதிர் யா/நடராஜ இராமலிங்க வித்தியாலயமும்.

17 வயதுப் பிரிவில் யா ஆவரங்கால் மகாஜனா எதிர் யா/நடராஜ இராமலிங்க வித்தியாலயமும்.

19 வயதுப் பிரிவில் யா/ஆவரங்கால் மகாஜனா எதிர் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி யா/அச்சுவேலி மத்திய கல்லூரி, எதிர் யா/அத்தியார் இந்துக் கல்லூரி ஆகியனவும் மோதவுள்ளன. (உ-79)

# சதாமை பதவி கவிழ்க்க சாத்தியமான வழிமுறைகள் குறித்து புஷ் ஆராய்வு

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் ஈராக்கிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் உடனடித்திட்டம் எதுவுமில்லை என்றும்,

அதேவேளை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்ப்பதற்கு சாத்தியமான வழிமுறைகள் அனைத்தையும் ஆராய்ந்து வருவதாகவும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

முதலில் இராஜதந்திர, அரசியல் நடவடிக்கைகளிலேயே அமெரிக்கா கவனம் செலுத்தும் என்றும்,

இதேவேளை, ஈராக் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றதா என்பதை கண்காணிப்பதற்காக, சர்வதேச கண்காணிப்பாளர்களை ஈராக்கிற்குள் அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதி புஷ் ஈராக் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் பவல் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவது அமெரிக்காவின் அந்நாடு குறித்த கொள்கையின் ஒரு பகுதி எனவும் குறிப்பிட்டுள்ளார். (உ-3)

## ஜனாதிபதி இராஜினாமா

(லண்டன்)

மொறீசியஸ் நாட்டின் ஜனாதிபதி காசின் புட்டின் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடுப்பு மசோதாவுக்கு எதிர்ப்புத்தெரிவித்தே அவர் பதவி விலகியுள்ளதாக ஜனாதிபதிசெயலகம் அறிவித்துள்ளது. (உ-5)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/குட்டியப்புலம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலனும்,

சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்சி.சிவமகாராஜா, வயாவிளான்மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் சி.நடராஜா,

கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் வலய ஆரம்பக் கல்விச்சேவைக்கால ஆலோசகர்திருமதிஇ.இராமலிங்கம், இளைப்பாறிய ஆசிரியர் சு.செல்லப்பா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## ஆப்கான் தலைநகருக்கு தொலைத்தொடர்பு வசதி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தொலைபேசி வசதிகளை ஏற்படுத்தும் நோக்குடன் தொலைபேசி பரிவர்த்தனை நிலையமொன்றை அமைக்கும் பணியில் தொலைபேசி நிறுவனமொன்று அங்கு ஈடுபட்டுவருகிறது.

இன்னும் மூன்றுவாரங்களில் பரீட்சார்த்த தொலைபேசி அழைப்புக்களை பெறுவதற்கான நடவடிக்கைகள துரிதப்படுத்தப்பட்டுளளதாகவும்,

தலைநகர் காபூலில் இதன் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது:

இதேவேளை, தலைநகர் காபூலில் இணையத்தள வசதிகள ஏற்படுத்தப் படவுள்ளதாகவும் கடந்தகால தலிபான் ஆட்சியில் இணையத்தளம் ஆரம்பிப்பதற்கு தடைவிதிக்கப்படிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தன் மக்கள் வெளிநாட்டிலுள்ள தமது உறவுகளுடன் தொடர்பு கொள்ள அயல் நாடான பாகிஸ்தானுக்கு இதுவரை செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## 14 தீவிரவாதிகள் பலி

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருவேறு தாக்குதல் சம்பவங்களில் 14 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்கள் ஜெய்சி முகம்மது மற்றும் லக்ஷறி இதொய்பா ஆகிய தீவிரவாத அமைப்புக்களின் உறுப்பினர்களென்றும் இத்தாக்குதலில் தமது தரப்பில் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

அடுத்தது காட்டும் பளிங்கு
போல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.
-குறள்

வலம்புரி

## சமாதான ஒளி தெரிகிறது!

கடந்த 20 வருட காலமாக யுத்தத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்த இலங்கை அரசு இப்போது யுத்தம் இருதரப்பு அழிவை யும், இழப்பையுமே தரும் என்ற உண்மையைப் படித்துள்ளது. மேற்கூறப்பட்ட உண்மையை இலங்கை அரசு படித்தது என்பதை விட ஆட்சியில் எந்தக் கட்சி அமர வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் பெரும் பங்குவகிக்கும் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் புரிந்து கொண்டார்கள் எனக் கூறுவது சாலப் பொருத்தமாகும்.

பேரினவாதிகள் அப்பாவிச் சிங்கள மக்களிடம் விதைத்து விட்ட தமிழின எதிர்ப்புக் களை இருபது வருடங்களில் பல்கிப் பெருகி வளர்ந்த போதிலும் கல்லில் முளைத்த பயிர் சில நாட்களில் கருகிப் போவது போல, தமிழின எதிர்ப்புக் களைகள் கருகிப்போவதற்கு இருபது வருடங்கள் எடுத்துள்ளன. ஆனாலும் களைகள் முழுமையாக கருகவோ, அல்லது களையப்படவோ இல்லை என்பதையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

சிங்களப் பேரினவாதத் தலைவர்களின் துவேஷ உணர்வுகளுக்கு அடிமையாகிய சிங்கள மக்கள் காலத்துக்குக் காலம் தமிழ் மக்களின் மீது தமது ஆத்திரத்தை-அடாவடித்தனத்தை காட்டி வந்துள்ளனர்.

அடக்கப்பட்ட இனம் விழித்தெழுந்தால் அதனை எல்லையிட்டுத் தடுக்க முடியாது என்ற வரலாற்று உண்மைக்கமைய தமிழ் மக்கள் மீது சிங்கள அரசுகள் கட்ட விழ்த்து விட்ட இன்வன்முறைகளுக்குப் பாடம் புகட்ட விடுதலைப் புலிகள் புறப்பட்டனர்.

அவர்களின் நிதானமான-தூரநோக்குடைய-நன்கு திட்டமிட்ட நடவடிக்கைகள் இன வெறி கொண்ட சிங்களவர்களின் மயக்கத்தை தெளிவடையச் செய்தது. இதன் முதற்கட்டம் 1977 களில் இருந்து தொடர்ந்து 17 வருடங்கள் ஆட்சி செய்து இனவதை புரிந்த ஐக்கிய தேசியக் க்ட்சிக்கு நல்ல பாடம் புகட்டி ''சமாதானம்'' எனக் கோஷம் எழுப்பிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு இடம் கொடுத்தனர். எனினும் ஜனாதிபதி சந்திரிகாவின் ''சமாதானம்'' என்பது வெறும் உதட்டளவு உச்சரிப்பு என்பதை உணர்ந்து கொண்ட சிங்கள மக்கள் 6 வருட அவகாசத்துடன் அவரின் ஆட்சிக்கு ஆப்பு வைத்து விட்டு, ''சமாதானம்'' எனக் கோஷமிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்குச் சந்தர்ப்பம் கொடுத்தனர். மக்களின் நம்பிக்கைக்கு அமைவாக புதிய அரசும்.

* போர் நிறுத்தம்.
* பொருளாதாரத் தடை நீக்கம்.
* வன்னிக்கான பாதை திறப்பு.
* பயண அனுமதி முறை நீக்கம்
* கொழும்பில் தங்குவதற்கான பொலிஸ் பதிவு முறை நீக்கம்.

ஏனைச் சமாதானத்தின் அடைவுக்கான வழிகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்தகைய ஓர் பாதை நீடிக்குமானால் நிச்சயம் சமாதானக் கீற்றுக்களை புதிய அரசினால் உருவாக்க முடியும்.

# மண்ணில் சிலுவையைத் தாங்கிட முடியாதவர் விண்ணில் மகிமையின் முடியைத் தாங்குவதில்லை

## பரமபிதா காட்டிய பாதை

விதைப்பதற்கும் அறுப்பதற்கும் காலங்கள் இருப்பது போல் மனிதன் தன்னை நினைப்பதற்கும், நிதானிப்பதற்கும், வருத்துவதற்கும், திருத்துவதற்கும் திருச்சபை கொடுத்த காலம் தான் தவக்காலம். வீண்புகழ் பேசி, வீறாப்புக் கொட்டி 40 நாள் கிறிஸ்தவ வாழ்க்கைப் புகழைத் தேடுபவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள். உழவன் பாடுபட ஒய்யாரமாக இருந்து ஊர்ப்பெருமை தேடுவோர் எத்தனை பேர் இருக்கின்றார்கள். எண்ணங்களும், செயல்களும் உயர்ந்தனவாக இருக்க வேண்டும் இல்லையேல் நாம் சாத்தானின் வலையில் சிக்கி விடுவோம்.

### சோதனைக்காலம்

நெருப்பினால் புடமிடப்படும் பொன்னைப் போல் சாத்தான் பதர்களை புடைத்து எடுப்பது போல் எம்மைச் சோதித்துக் கொண்டே இருப்பான். நிலைத்து நிற்பவன் தன் ஆன்மாவை மீட்டுக் கொள்வான். ஆண்டவரையே சாத்தான் சோதித்தான். கல்லை அப்பமாக மாற்றும்படியும், மலையில் இருந்து குதிக்கும்படியும், தன்னைத் தொண்டனிட்டு வணங்கும்படியும் பசப்பு வார்த்தைகளைப் பேசினான். ''உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதியாதே'' என்று ஆண்டவர் கூற அலகையானவன் அவரை விட்டு விலகிச் சென்றான் என்று நற் செய்தி (லூக்க 4:1-13) ஏடுகள் கூறுகின்றன.

### இறைவன் மனிதனை நேசிக்கிறார்

ஆதிமுதல் நேர்ந்த பாவத்தின் விளைவால் ஆணவம் மனிதனை தன் அடிமையாக்கியது புகழை விரும்பித் தேடுவோர் புண்ணியத்தை இழந்து விடுகின்றனர். மனிதனை நேசிப்பதில் கடவுள் இரக்கமுள்ளவராக இருக்கிறார். ஆனால் மனிதன் ஊன் இயல்பில் விட்டில் பூச்சி வீழ்ந்து துடிப்பது போல் துடிக்கிறான். இறைவன் கட்டளைகள் கொடுத்திருந்தும் கற்பனையில் மிதக்கின்றான் அற்புதங்கள் காணத்தவிக்கிறான் விசுவாசத்திலும் அன்பிலும் நிலைத்திருக்கிறவன் இறைவனையும் அயலானையும் நேசிக்கின்றான். அவனைத் தான் இறைவன் நேசிக்கின்றார். எமது பெருமைகளையோ திறமைகளையோ, பேர்புகழையோ காட்டி நாம் இறுதி நாள் தீர்ப்பில் இறைவன், பக்கம் சேரமுடியாது. ''எனது பெயரின் பொருட்டு ஒரு கிண்ணம் நீர் கொடுப்பவன் கைமாறு பெறாமல் போகான்'' என்கிறார் கிறிஸ்து. எதனை நாம் செய்ய வேண்டும்? எதனை நாம் கடைப்பிடிக்க வேண்டும்?

### செபமும், தவமும் தான் சீர்ப்படுத்தும்

சோதனைகள், வேதனைகள் ஏற்படாத வாழ்க்கை இல்லை. சோதனைகளை வெற்றியோடு விடுவிப்பது தான் எம் வாழ்க்கைப் பயணம் தொடர்வதற்கான வழியாகும். மண்ணில் சிலுவையைத் தாங்காதவர் விண்ணில் மகிமையின் முடியைத் தாங்க முடியாது. எண்ணற்ற சிலுவைகள் எம் வாழ்வில் ஏற்படும்.

**அன்ரனி பீற்றர்**

இறைவனின் துணையோடு அச் சிலுவைகளை நாம் தூக்க முடியும்.

''நெற்றியில் நீறணிந்து
பற்றிய பாவம் போக்க
பக்தியாய் நோற்கும் நோன்பு
பாவங்கள் கழுவிப் போக்கும்''

நோன்பு இருந்து செபித்தால் எந்தச் சாத்தானையும் விரட்ட முடியும் என்று இயேசு தம் சீடருக்கு அறிவுரை கூறினார். பாவியைக் கரைசேர்க்கும் ஓடம் செபமும் தவமும் தான். தன்னிடம் பாவம் இல்லை என்போனே பெரும்பாவியாக இருக்கின்றான். தாழ்மையும், பொறுமையும் எம்மை இறைவனோடு இணைக்கும். கருணையும் இரக்கமும் எமக்கு கடவுள் அருளைப் பெற்றுத் தரும். கற்று உணர்ந்து வாழ்வோம்.



ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சுகே அனான் அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்து நிறுவன உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம். படத்தில் வடக்கு கிழக்கு மாகாண ரெலிங்கொம் பணிப்பாளர் எஸ்.கனகசூரியர், படை அதிகாரி ஆகியோரை முதலாவது படத்திலும் வடபிராந்தி முகாமையாளர் எஸ். அன்ரனிராஜன், பொறியியலாளர் நவநீதன் உட்பட நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.


# சிறுவர் பற்றி சிந்திப்போம்!

18 வயதிற்குட்பட்ட எல்லா சிறுவர்களுக்கும் கல்வி பயிலும் உரிமை கட்டாயம் உண்டு ! கல்வி சிறுவர்களின் பிறப்புரிமை. இவ் உரிமையை உங்கள் அயலில் உள்ள ஒவ்வொரு சிறுவரும் அனுபவிக்கின்றனரா என்பதில் அவதானத்துடனும், அக்கறையுடனும் இருங்கள்.

**ஆசிரியர்களே!**

கல்வி என்பது வெறும் ஏடுகளுடன் மட்டும் தொடர்புடையதல்ல. பிள்ளைகளின் ஆளுமை, திறமை, உடல் மற்றும் உள ஆற்றல்கள் ஆகியவற்றை முழுமையாக விருத்தி செய்வதே கல்வியின் நோக்கம் என்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்.
எனவே பிள்ளைகளுக்கு கல்வியினைப் போதிப்பதுடன் அவர்களின் உள மேம்பாட்டிற்கான ''மகிழ்ச்சியான சூழல்'' குறித்தும் அக்கறையுடன் இருப்போமாக.



''சிறுவரின் வளர்ச்சிக்காய்........
சிந்திப்போம் செயற்படுவோம்''
-மஞ்சுளா திருக்கேசன்-
(ஆசிரிய கலாசாலை,பலாலி)

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் 30, போதனாவைத்தியசாலை
யாழ்ப்பாணம்.
T.P : 021 - 2261 EXT 274

சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு

(C/3549)

## 'ஈழநாதம்', 'புலிகளின் குரல்' செய்தியாளர்கள் அமைச்சருடன் பேட்டி

(வவுனியா)

'ஈழநாதம்' பத்திரிகையின் இரண்டு நிருபர்கள், 'புலிகளின் குரல்' வானொலியின் இரண்டு நிருபர்கள் அமைச்சர்கள் மலிந்த மொறகொட, நூர்தீன் மசூர், இராணுவத்தளபதி லெப்ரினன் ஜெனரல் பலகல்ல ஆகியோரிடம் பேட்டிகள் எடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் வரலாற்றில் முதன் முறையாக புலிகளின் தொடர்பு சாதன செய்தியாளர்கள், இத்தகைய பேட்டிகளை இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிகளான ஓமந்தை, விளக்கு வைத்த குளம் ஆகிய பகுதிகளுக்கு வந்து பேட்டிகள் எடுத்தமை இதுவே முதற்றடவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# அமைச்சர் ஆறுமுகம் மீண்டும் புலிகளின் பகுதிக்கு விஜயம்!

## கரிகாலனைச் சந்தித்து பேசுவார்

(கொழும்பு)

தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் வீட்டு வசதிகள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நாளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கொழும்பில் இருந்து விமானம் மூலம் மட்டக்களப்பு விமானப் படைத்தளத்தை வந்தடையும் அமைச்சர் அங்கிருந்து பட்டிருப்புப் பாலம் வழியாக புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்திற்கு செல்வார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் அமைந்துள்ள புலிகளின் மாவட்ட செயலகத்தில் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் மற்றும் முக்கியஸ் தர்களான விசு, துரை ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்ததை நடத்தவுள்ளார்.

இதே வேளை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கடந்த புதன் கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சென்று புலிகளின் முக்கியஸ் தர்களோடு பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் இரண்டாவது தடவையாக நாளை அங்கு செல்லவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.(ந-4)

### பல்கலை...

கொண்டிருந்த கடந்த வருட க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ள மாணவி ஒருவரை யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட மாணவர்கள் சிலர் அழைத்து தகாதவார்த்தைகளால் ஏசி ராகிங் இல் ஈடுபடுக்கினர்.

இதனால் விசனமடைந்த பொது மக்கள் அம்மாணவர்களை நையப் புடைத்து துரத்தியதாகவும் தெரியவருகிறது. (இ)

### தேசிய...

வீதமாகவும் மற்றும் தேசிய பாதுகாப்பு வரி 6.5 வீதமாகவும் அறவிடப்படுகிறது. இத்தகைய இரண்டு வரிகள் நடைமுறையில் இருந்து அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தில் வருடாந்தம் 30 கோடி ரூபா குறைவு ஏற்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பாதுகாப்பு வரி நீக்கப்படும் பட்சத்தில் அதற்கு ஈடாக ஜி.எஸ்.ரி வரி 17 வீதமாக அதிகரிப்பதற்கும் நிதியமைச்சு வட்டாரங்கள் யோசனை செய்து வருகின்றன. (வ)

### யுத்த...

ஜெனரல் லயனல் பலகல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசும் விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்தம் செய்த காலத்தில் ஒரு செல்லையோ, ஒரு துப்பாக்கி ரவையையே வெடிக்க வைக்கவில்லை. இதன் காரணமாக மாதம் ஒன்றுக்கு 100 மில்லியன் ரூபா மிச்சமாகியுள்ளது.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை முப்படைகளும் ஆதரிக்கின்றன, நாட்டிலுள்ள எந்தப் பகுதிக்கும் மக்கள் சென்றுவர உரிமையுண்டு.

சமாதானம் என்பது மிகவும் சிக்கலானது, எப்படியிருப்பினும் அரசு மனம் தளராது சமாதான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (வ)

### சமாதான...

தேசியக்கட்சி குழப்பியடித்தது. அதுபோல் நாமும் செய்யக் கூடாது.

உள்ளூராட்சி சபை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த எவரும் புதிய அரசு முன்னெடுத்துள்ள சமாதான முயற்சியை குழப்பும் வகையில் பிரசாரங்களை மேற்கொள்ளக் கூடாது என்றும் கூறினார்.

இது இவ்வாறிருக்க அரசுக்கும்-புலிகளுக்கும் இடையே ஏற்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் விரும்பினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் எனக்கும் இடையே சமாதான பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு ஏற்பட்டால் அப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தயார் என ஜனாதிபதி ஒரு சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

### மரம்...

செல்வரட்ணம் ஜெயம் (வயது 47) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்கள் ஆவர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

மரக்காலை ஒன்றுக்கு தறித்த மரங்களை ஏற்றச் சென்ற மேற்படி நபர்கள் சம்பவ இடத்தில் மரக்குற்றிகளை ஏற்றி விட்ட ரக்டரை ஸ்ராட் செய்து புறப்பட்ட சமயம் பாரிய சத்தத்துடன் வெடி வெடித்தது. இதனால் ரைக்டர் பெட்டி மேலே தூக்கி வீசப்பட்டு சுக்குநூறாகச் சிதறியது . எனினும் ரைக்டர் சாரதி செல்லத் துரை குகதாஸ் சிறிய காயங்களு டன் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளார்.

அமுக்கவெடி வெடித்த இடத்தில் சுமார் 5அடி ஆழமுள்ள பாரிய குழி ஒன்று காணப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர்களை ஸ்தலத்துக்கு விரைந்த அரியாலை தபால்க்கட்டை சந்திப் பகுதி படையினர் முதலுதவி அளித்து இராணுவ அம்புலன்ஸ் வண்டியில் வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

இதேவேளை உயிரிழந்தவரின் சடலம் மரண விசாரணைக்குப் பின்னர் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.


இதேவேளை இன்றைய சமாதானச் சூழலில் மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டுள்ளன.

அரியாலை பகுதியிலும் மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நிலத்தில் புதைக்கப்பட்ட வெடி பொருட்களை அகற்றுமாறு யாழ் சமூகம் பல தடவைகள் பல தரப்பிடமும் கோரிக்கை விடுத்த போதும், அவை செயற்படுத்தப் படாமையே இத்தகைய அனர்த்தங்களுக்குக் காரணம் என மக்கள் குறை கூறிக்கொள்கின்றனர்.

இதேவேளை கடந்த வருடம் இருபாலைப்பகுதியில் ஆட்டோ ஒன்று அமுக்கவெடியில் சிக்கியதில், அதில் பயணம் செய்த ஒரே குடும்பத்தை சேர்ந்த ஆறு பேரும் மற்றும் ஆட்டோ சாரதியும் உயிரிழந்தமை இங்கு நினைவு கூரத்தக்கது. (இ.10,104,225)

மதி அவசியம்



கரவெட்டி கரணவாய் செல்வாபுரத்தில் போரூட் நிறுவன உதவியுடன் அமைக்கப்பட்ட வீடமைப்பு பகுதியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க சிறுவனொருவனுக்கு போரூட் நிறுவன செயலாளர் ரஜியாஹெக்னஸ் உண்டியலை வழங்குவதையும் அருகில் இளங்கோ சனசமூக நிலையத் தலைவர் கு. மகாலிங்கம், போரூட் பருத்தித்துறை திட்ட இணைப்பாளர் தெய்வீகராணி, கரணவாய் கிழக்கு கிராமசேவையாளர் சூரியகுமார் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பாடசாலை அதிபர் அ. அகிலதாஸ் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம வருந்தினர் யாழ் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. இராசலிங்கம் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் மு. சுகுமார், வைத்தியநாதன் ஐயா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாணம் இலங்கை வங்கியில் நல்லூர் றோட்டறிக் கழகத்தினர் மர நடுகையில் ஈடுபட்ட போது இலங்கை வங்கி பிரதேச முகாமையாளர் சி. நடராஜலிங்கம் மரமொன்றை நாட்டுவதையும் கழக உறுப்பினர்களும் வங்கி ஊழியர்களும் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.


வலி தென்மேற்கு மக்கள்

வலம்புரியில் இலகுவாக விளம்பரம் செய்ய

எமது விளம்பர முகவர்

"திருப்பதி"

இல.15, மெமோறியல் லேன்,

மானிப்பாய்.

தொலைபேசி: 3143 பக்ஸ்: 2887

உங்கள் விளம்பரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

வலம்புரியின் விளம்பர முகவர்களாகச் செயற்பட விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

- நிர்வாகம் -

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த

சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்

விஷேசமாக தயாரிக்கப்பட்டது.

சுத்தமான

வி. எஸ். பி. நல்லெண்ணெய்

தயாரிப்பாளரும், ஏக விநியோகஸ்தரும்

பரிமளா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (C-1986)

வகுப்பு ஆரம்பம்

விசேட ஆங்கிலம்

SPOKEN WITH GRAMMER

இன்று (ஞாயிறு)

4 மணிக்கு புதிய பிரிவு

ஆரம்பம்

MR. K. SUBRAMANIAM

நல்லூர் சயன்ஸ் அக்கடமி (4702)

உடன் தேவை

* அலுவலக சிற்றூழியர்

(இரவுக் கடமைகளில் மட்டும்)

* வீடுகளுக்கு பத்திரிகை விநியோகிப்போர்.

(தத்தம் இடங்களில் விநியோகிக்க முடியும்)

குறிப்பு:-

வியாழக்கிழமை காலை 10 மணிக்குப் பின்னர் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,

வலம்புரி.

சுவைப் பிரியர்களுக்கு ஓர் நற்செய்தி!

* புரியாணி * பைபல்வகைகள்

* நூடில்ஸ் * [F] ப்றைட் றைஸ்

* சூப் வகைகள்

மில்லேனியம் றெஸ்ரோறன்ற்

MILLENNIUM RESTAURANT

குறித்த நேரத்தில் உடனடியாகப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

76/60, இராமநாதன் வீதி (பல்கலைக்கழக வீதி), கலட்டி, யாழ்ப்பாணம். T.P.: 2810

[C/3550]


இப்பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.